ஸ்ரீ கனுங்கோ கமிட்டியின் ஆராய்ச்சிகளும், சிபாரிசுகளும்  Regd. No. M 6207

3-JAN 1956 MADRAS

# கிராமோதயம்

20 பக்கங்கள்

22 NOV 1954

[தீபாவளி ஆண்டு மலர்]

மலர் 2 ✣ திருப்பூர் - அக்டோபர் 15 * 1954 * விலை 1 அணா ✣ இதழ் 24

## சமர்ப்பணம்

இம்மலருடன் "கிராமோதய"த்திற்கு இரண்டாண்டு பூர்த்தியடைகிறது.

எங்கும் சுரண்டல், எதிலும் சூது நிறைந்த இக்காலத்தைப் பாருங்கள். உலகிற்கே ஆடை அதிசயமாயிருந்த நாளில் நயமான பட்டாடைகள் நெய்த நாட்டில் இன்று மானத்தைக் காக்க மில் கலை எதிர்பார்க்க வேண்டும்! அகிலமெலாம் திரண்டு அண்டிவந்து பிழைத்த பாரதநாட்டில் இன்று பஞ்சம்! பட்டினி!! பைங்கிளிகள் போன்ற பச்சிளம் குழந்தைகளுக்கு பிடி சோறு போட பக்கத்து நகரத்திலுள்ள அரிசி மில்லின் கருணை வேண்டும்! வருடத்திற்கு ஒருநாள் கோடி கட்டி, கூட்டம் கூடி இனிதுவாழ எத்தனை பேர்கள் எவ்வகையிலெல்லாம் லாபம் சம்பாதிக்கின்றூர்கள், என்று சிந்தித்துப்பாருங்கள்!! கலைமகளையும், மலைமகளையும் பூஜைசெய்த நாட்டிலே மங்கையரை என்னென்ன விநோதங்களுக்காக விளம்பரப்படுத்துகிறார்கள்! எத்தனை மஞ்சள் பத்திரிகைகள் எவ்வாறெல்லாம் மனிதனின் இழிவானவிகாரங்களைத் தூண்டி விடுகின்றன!

வையமெல்லாம் வஞ்சம் சூழ்ந்திருக்கிறது. பஞ்சம் சூழ்ந்த பாரதநாட்டின் பல்கோடி மக்கள் கஞ்சிக்கும் பரிதவிக்கும்பொழுது நமக்கின்று இரண்டாண்டு பூர்த்தியானால் என்ன? ஆகாமல் போனால் என்ன? அவர்களுக்கு ஆண்டுமலர்களாலும், தீபாவளி பண்டிகையாலும் எவ்வித பிரயோஜனமுமில்லை. அவர்கள் நிலை சீர்பட இந்நாட்டு மக்கள் அனைவருக்கும், எங்கும் எப்பொழுதும் சுயமரியாதையுடன், தொழில் புரிந்து வாழ வகை செய்யவேண்டும்.

மானிலமெல்லாம் மனித சமூகத்திற்குச் சொந்தமென ஆகவேண்டும். நீரும், நிலமும், நிழலும் மனிதன் உயிர்வாழ பரமன் அளித்த சாதனங்கள். அவைகளைப் பயன் படுத்தி பணிசெய்து பயன்பெற இருகைகளையும் தந்தார். இவைகளுக்கு வேலிகட்டி, உரிமை கொண்டாடி, உழைப்பவருக்குரிய உரிமைகளை மறுக்கும் நிலை மாறவேண்டும். இதை அண்ணல் காந்தியடிகள் வழியைப்பின்பற்றி அன்பு வழியில் தீர்ப்போமா? அல்லது இரத்தம் சிந்தி, சட்டம் போட்டுத் தீர்ப்போமா?

இந்தச் சூழ்நிலையில் இவைகளையெல்லாம் எதிர்த்து நின்று பூமிதானத்தின் மூலம், கிராமக் கைத்தொழில்களை ஆதாரமாகக்கொண்ட, சுரண்டலும், அதிகார ஆட்சிமுறையும் இல்லாத ஒரு சர்வோதய சமுதாய அமைப்பை எய்த பணியாற்றும் எம்மை இவ்விராண்டுகளாகப் பேணி வளர்த்த நேயர்களுக்கு இம் மலரை மகிழ்ச்சியுடன் சமர்ப்பணம் செய்கிறோம். — ஆசிரியர்

### "மாநிலம் பொதுவானதென்போமே !!"

கவியோகி — சுத்தானந்த பாரதி

சேர்ந்து வாழும் திறமறிவோமே
தீரராகத் தலை நிமிர்வோமே
சோர்ந்திடாது துணிந்து நிற்போமே
சொல்லும் செய்கையும் ஒன்று செய்வோமே
கூர்ந்த நன்மதி கொண்டுழைப்போமே
கொண்ட கொள்கைக்குயிர் கொடுப்போமே
நேர்ந்த போதெல்லாம் தொண்டுசெய்வோமே!
நேரத்தைப் பொன்னென்றே நினைப்போமே!

தன்னலத்தைத் தவிர்த்திடுவோமே
தாய்நலமாந் தவம் புரிவோமே!
அன்னியர் வலையை அறுப்போமே
ஆண்மை தன்னை மிகவளர்ப்போமே!
மன்னன் எம்மனச் சாட்சியென்போமே
மாநிலம் பொதுவானதென்போமே;
இன்னமும் இருளில் மடியாமல்
இரவிபோல விழித் தெழுவோமே;
இன்னிளங்கனிச் சோலையெழிலில்
இளைஞர் கல்வியிலகச் செய்வோமே;
பொன்னைப் போலநந்தாய் மொழிபோற்றிப்
பொதுமொழியும் பயின்றிடுவோமே!
பெண்ணை எங்கும் பெருமை செய்வோமே
பேதை யென்னும் பெயர்மறப்போமே!
கண்ணிரண்டெனக் காதலர் வாழக்
கண்டு கண்டு களிப்புறுவோமே!
ஈடிலாத மணந்தவிர்ப்போமே
இளங் கைம்பெண்விழி நீர்துடைப்போமே!
பீடிலாத நடை தவிர்ப்போமே
பெரிய நன்னிலை பெற்றிடுவோமே,
சிறுமை பொய்யகந்தை தவிர்ப்போமே
சீர்மை நேர்மை சிறந்தொளிர்வோமே,
வெறுமையச்சம் பொறாமை மடமை
விடமெனத்தள்ளி வீறுகொள்வோமே!
நெற்றி வேர்வை நிலத்தினிற் சொட்ட
நிபுணராகப் பணி புரிவோமே;
எற்றி நம்மை எதிர்க்கும் இடரை
ஏறுபோல நடத்திடுவோமே;
வரம்பிலாது கலை வளர்ப்போமே
வாழ்விற் காவிய வாள்சமைப்போமே!
பரம்பொருளைத் தினம் நினைப்போமே
பாரெல்லாம் அவன் ஆடலென்போமே!

## "உழைப்பினுல் உருவான பள்ளிக்கூடம்"

**கைத்தொழில் கல்விச்சாலை**

சென்ற மூன்று வருடங்களாக மூலனூர் சரகத்தில் நைனுக்கவுண்டன் வலசு என்ற சிற்றூரில் ஸ்ரீ சு. வைரவலிங்கம் கிராமச் சிறுவர்களுக்கு ஒரு கைத்தொழில் கல்விச்சாலை நடத்திவருவது வாசகர்களறிவார்கள்.

அந்த கல்விச்சாலை கிராம மக்கள் இலவசமாக தந்துதவியிருந்த மூன்று நான்கு வீடுகளில் நடைபெற்றுவந்தது. நான்கு மாதங்களுக்கு முன்பு திரு. வைரவலிங்கம் குடியிருந்து வந்த வீட்டின் சொந்தக்காரர் ஷை வீட்டைக் காலிசெய்து விடும்படியாகக் கோரியதன் காரணமாக, மாணவ, மாணவியர்கள் உணவு விடுதியிலேயே ஒரு பகுதியில் திரு. வைரவலிங்கம் குடிபுகுந்தார். மூன்று அங்கண வீட்டில் (சுமார் 20'×8') தன் குடும்பத்துடன் இருந்துகொண்டு, சுமார் 18 மாணவர்கள் மூன்று வேளையும் உணவு தயாரித்து, உண்ணும் அளவுக்கு இடவசதி இல்லாமல் கஷ்டப்பட்டுவந்தனர்.

**பந்தல் போடத் திட்டம் வகுத்து மனை கட்டினுர்கள்**

காலக்கிரமத்தில் வீட்டிற்கு முன் முற்றத்தில் லேசான ஒரு பந்தல் போட்டு, வெயிலின் வெப்பத்தையும், காக்கை குருவிகளின் தொந்தரவையும் தவிர்த்து ஒரு கூறைசாலை மட்டும் அமைப்பதென முடிவு செய்து குழந்தைகளும் அவர்களுடைய பெற்ருேர்களும், மற்ற கிராம முக்கியஸ்தர்களும் அடங்கிய ஒரு கூட்டத்தில் இதைப்பற்றி விளக்கப்பட்டது. பள்ளிக்கூடம் குழந்தைகளின் பயிற்சி மூலம் கிடைக்கும் வருமானத்தைக்கொண்டு நடைபெற்று வருகிறபடியால் அதிகமாகச் செலவு செய்வதற்கில்லை.

கிராம மக்கள் ஒவ்வொருவராக எழுந்து தங்களாலியன்ற உதவியளிப்பதாக வாக்களிக்கலானுர்கள். சிலர் பனை ஓலைகள் கொடுத்தனர். பலர் காட்டு மரங்கள் கொடுத்தனர். பலர் இவைகளைக் கொண்டுவர வண்டி கொடுத்தார்கள். பலர் பந்தல் போட உழைப்பை தானமாகக் கொடுக்கமுன்வந்தனர். முடிவாகப் பேசிப் பேசி பந்தல் போடுவதற்கு பதிலாக சிறு குடிசை போடுவதென்று முடிவு செய்து வேலையை ஆரம்பித்தார்கள். கட்டிடம் கட்டுவதற்கு மாணவ மாணவியர்கள் தங்கள் பயிற்சி நேரம் போக, மீதி நேரத்தில் 584 ஆள் மணி நேரம் வேலை செய்திருக்கிருர்கள். (ஒரு ஆள், ஒரு மணிநேரம் வேலை செய்வதை ஆள் மணி என்று கூறப்படுகிறது. (Man-hour). மாணவ மாணவியர்களின் பெற்ருேர்கள் கட்டிடம் எழுப்ப சுமார் 1300ஆள் மணி நேரம் வேலை செய்திருக்கின்றனர். மற்ற கிராமவாசிகள் சுமார் 264 ஆள் மணி நேரம் உழைத்தார்கள்.

**உழைப்புக்கு உணவு கொடுத்தார்கள்**

வேலை செய்த அனைவருக்கும் பயிற்சிசாலை உணவு விடுதியிலேயே உணவு அளிக்கப்பட்டது. இவர்கள் சாப்பாட்டுச் செலவுக்காக ரூ. 134-4-0 செலவாயிற்று.

உழைப்புடன் கிராமவாசிகள் சுமார் ரூபாய் 33—11—0க்கு மரம் மரச்சாமான்களாக நன்கொடை அளித்தனர். தச்சுக்கூலி ரூ. 43—3—0ம் கொத்துக்கூலி ரூ. 22—8—0ம் கொடுக்கப்பட்டதைத் தவிற வேறு செலவுகள் இல்லை.

**சில செலவு விபரங்கள்**

ஓடு, சிமெண்டு, சுண்ணும்பு, மரம், பலகை, கம்பந்தட்டு, கதவு, ஜன்னல் முதலியவைகளுக்கு இரும்பு சாமான்கள் முதலியவைகள் வகை சுபர் ரூ. 164—4—0 செலவாயிற்று.

மேலே கூறிய கணக்குப்படி உழைப்பிற்கு ஆள் ஒன்றுக்கு நாளொன்றுக்கு (Man day) ரூ. 0—12—0 கூலி என்று கணக்கிட்டால் சுமார் ரூ. 201—6—0 பெருமானமுள்ள உழைப்பு இப்பள்ளி நிர்மாணத்திற்குக் கிடைத்திருக்கிறது. மாணவர்களின் தாய்மார்கள் மூவரும் தந்தையர் 6 பேரும் சென்ற ஒன்றரை மாத காலம் தங்கள், இதர வீட்டு வேலை போக, மீதி நேரம் பூராவும் இதே வேலையில் ஈடுபட்டு உற்சாகமாக வேலை செய்தது பாராட்டத்தக்கது.

**திறப்புவிழா**

இம்மாதிரி உழைப்பினுலேயே உருவான பள்ளிக்கூடம் இன்று சுமார் 8 அங்கணம் (48'×12') மாணவ மாணவியர்களுக்கு பயிற்சி பெறவும், இளைப்பாறவும் உதவுகிறது

ஷை கட்டிடத்தை சென்ற 2-10-'54ல் சர்க்கா ஜயந்தியன்று தமிழ்நாட்டு சர்வ சேவா சங்க பிரதிநிதி திரு. அ. பாலகிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்து சொற்பொழிவாற்றினுர்கள்.

**என். எஸ். சுப்ரமணியம்.**

○ ● ○

## கிராமங்களில் வேலையும், வேலையில்லாமையும்

*[இக்கடிதம் எழுதியவர் தமிழகத்தை தட்டியெழுப்பி தியாகத்தியில் குதிக்கத்தூண்டிய "சுதந்திர சங்கு" என்ற தேசிய மாதப் பத்திரிகையின் ஆசிரியராக இருபதாண்டுகளுக்கு முன் வீரசேவை புரிந்தவர். இன்று அவர் அன்று கண்ட கனவுகளை நனவாகக் காணவிரும்புகிருர். உழைப்பை ஊதியமின்றி கொடுத்தல் என்பதும் கொடைபோல் தன்னிடமிருந்தே துவங்கவேண்டும். பிறருக்கு அறிவுறுத்துவதால் மட்டிலும் ஏதாவதொரு தேசம் அபிவிருத்தி அடையக்கூடுமாயின் நம் நாடு எவ்வளவோ நாட்களுக்கு முன் சிறப்புற்றிருக்கும். சொல்வதைச் செய்யும் கர்மவீரர்கள் பெருகவேண்டும். அப்பொழுது ஐந்தாண்டுத்திட்டம் ஓராண்டிலேயே பூர்த்தியாவதைக் காணலாம். காந்திக்குப் பின் விளேபா. அவர் வழி பின்பற்றினுல் ஒருக்கால் இந்த கனவும் நனவாகலாம்!!]*

— ஆசிரியர்

**குத்தகை அறுவடை**

தற்சமயம் கிராமங்களில் அறுவடை நடந்துகொண்டிருக்கிறது. ஒரு ஏக்கர் நெல் அறுவடை செய்ய நான்கு ஆண்களும், ஆறு பெண்களும், ஈடுபடுகின்றனர். 4 ஆண்களுக்கு ஒரு நாள் கூலி $1\frac{1}{2}$ படி நெல்லும், 6 பெண்களுக்கு 1 படி நெல்லும் கொடுக்கப்படுகின்றது. வேலை நேரம் பற்றிய எவ்விதமான கட்டுப்பாடும் கிடையாது. இவ்விதமான அறுவடைக்கு "குத்தகை அறுவடை"யென்று கூறப்படுகிறது. இடைவேளைக்கு உணவாக இவர்களுக்கு ராகி (கேழ்வரகு) கஞ்சி கொடுக்கப்பட்டால் அவர்கள் மாலை வெகுநேரம் வரை வேலை செய்யக் கட்டுப்பட்டவர்களாவார்கள். இம்மாதிரி வேலை செய்தால் ஒரு நாளைக்கு $1\frac{1}{2}$ ஏக்கர் அறுவடை செய்யலாம். ஆனுல் உண்மையில் நடப்பது யாதெனில்.........

**ஏழைகள் ஒற்றுமையும் தியாகமும்**

மேற்கூறியபடி தேவையான வேலையாட்கள் 10 பேர்களுக்குப் பதில் நான்கு மடங்கு அதிக

[தொடர்ச்சி 136-ம் பக்கம் பார்க்க]

3 - JAN 1956 MADRAS

# ஜனசக்தியால் சர்வோதய சமுதாயம் காண பூமிதானம் ஒரு வழி

**கடம்பூர் சர்வோதய சம்மேளனத்தில் ஸ்ரீ தேவ்**

24-9-54ம் தேதி கடம்பூர் சர்வோதய சம்மேளனத்தில் மாலையில் பிரார்த்தனைக்குப் பின் நடந்த பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ தேவ் பேசியதாவது:—

**கரடுமுரடான நெடுந்தூர பாதை**

அஹிம்சை வழியில் கஷ்டம்தான் இருக்கும். மற்ற வழிகளைப் போல் விரைவான வெற்றிகள் கிடைக்குமென்று ஊழியர்கள் எதிர்பார்க்கக் கூடாது. அஹிம்சைத் தத்துவம் இருதயத்தோடு சம்பந்தப்பட்டது. எந்த அளவில் இதயம் தூய்மையாக உள்ளதோ அந்த அளவில்தான் வெற்றியும் கிடைக்கும். ஊழியர்கள் அதை நினைவிற் கொள்க. குறைகளை மற்றவர்கள் மீது கட்டக் கூடாது. ஜீவன் தானத்தைப் பற்றி ஆச்சாரிய கிருபலானி கயா சம்மேளனத்தின் போது குறிப்பிட்டு ஜீவன் தானம் மட்டும் செய்தால் போதாது. ஜீவன் புனிதமாக இருக்கவேண்டும். ஆண்டவனுக்கு அர்ப்பணிக்கின்ற எந்த வஸ்துவும் புனிதமாகவும், பரிசுத்தமானதாகவும் இருக்கவேண்டும். ஜீவன் தானம் கொள்பவர்கள் தங்கள் வாழ்விலே ஒழுக்கம், புனிதத் தன்மை இரட்டிப்பாகக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். வாழ்வு எந்த அளவில் புனிதமாக இருக்கிறதோ அந்த அளவிற்குத் தான் முன்னேற்றமடைய முடியும். அஹிம்சையில் அன்பு சக்தியும், சத்தியாக்ரகமும், ஒத்துழையாமையும் அடங்கியுள்ளது.

**வாழ்க்கை தூய்மை பெறவேண்டும்**

நாம் நம்மைத் தூய்மைப் படுத்திக்கொண்டு முன்னேறிக்கொண்டே இருப்போமானால் இவைகள் தானே வந்துவிடும். சத்தியாக்கிரகத்திற்கென்று ஒரு தனி ஏற்பாடு செய்யவேண்டியதில்லை விநோபாஜி அவர்கள் சத்தியாக்கிரகம் ஒரு நிர்மாண வேலைதான் என்றார். வயது முதிர்ந்த என்னுடைய நண்பர் ஒருவர் இப்போதைக் காட்டிலும் வேகமான ஒரு வழி வேண்டுமென்று சொல்கிறார். நாம் எது செய்தாலும் அது அஹிம்சை முறையில் தான் செய்யவேண்டியிருக்கிறது. பீஹாரிலும், யு. பி. யிலும் நிலதானம் வெற்றியடைந்ததற்கு அங்குள்ள நிலப் பிரபுக்களிடத்தில் நிலம் அதிகம் இருப்பதாக சொல்லப்படுகிறது. அங்குள்ளவர்களிடத்தில் அதிக நிலம் இருந்ததினால் மட்டுமே பூதான இயக்கத்தின் வெற்றிக்குக் காரணமில்லை, தமிழ் நாட்டில் எத்தனை நிலச்சுவான்தார்களை பூதானத்திற்காகத் தொண்டர்கள் சென்று பார்த்தார்கள்?

**சத்தியாக்கிரகத்திற்கு அவசியமான சூழ்நிலை**

"இன்று மகாநாட்டுப் பந்தலில் ஒருவர் நிலதானம் தந்தார், அவருக்குள்ள 25 ஏக்கரில் 6ல் ஒரு பங்கு நிலதானம் கொடுத்தார். தமிழ் நாட்டிலுள்ள மொத்த நிலச்சுவான்தார்களில் 6ல் ஒரு பங்கு பேரையாவது தொண்டர்கள் சென்று நிலம் கேட்கவேண்டும். அப்போதுதான் சத்தியாக்கிரகத்திற்கான சூழ்நிலையாவது ஏற்படும். இரண்டாவதாக அப்படி ஒரு சத்தியாக்கிரகம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டால் யார் சத்தியாக்கிரகம் செய்வது? காந்திஜி இருந்த காலத்தில் சத்தியாக்கிரகிகளுக்கு நிபந்தனைகள் ஏற்படுத்தினர். பூமிதான இயக்கத்திற்கு சத்தியாக்கிரகம் செய்வதற்கு யார் எத்தகைய நிபந்தனைகள் போடுவது? விநோபாஜி அவர்கள் பூமிதான வேள்வியில் பங்கு எடுத்துக்கொள்கின்றவர்கள்தான் இயக்கத்தில் உண்மையான தொண்டர்கள் என்று சொல்கிறார். பூமிதானம் செய்பவர்கள் சம்பத்துதானம் செய்பவர்கள், உழைப்பு தானம், அறிவு தானம், ஜீவன் தானம் செய்பவர்கள்தான் சத்தியாக்கிரகத்தில் பங்கு எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த வேள்விக்கு யார் ஆகுதி கொடுக்கின்றார்களோ அவர்களே சத்தியாக்கிரகத்திற்குத் தகுதியுடையவர்கள்.

**தேர்தலில் மயக்கமடையாதீர்கள்**
**பூமிதானத்தை ஒத்திப்போடாதீர்கள்**

"எனது தமிழ் நாட்டு யாத்திரையைத் தள்ளிப் போடவேண்டுமென்று ஸ்ரீ ஜெகந்நாதன் கேட்டுக்கொண்டார். இதற்கு அவர் சொல்லிய காரணம் ஜில்லா போர்டு தேர்தல். நான் ஒரு ஜில்லாவில் யாத்திரைக்குச் சென்ற போது அங்கு ஜில்லா போர்டு தேர்தல்கள் இல்லை. ஆனால் எனது கூட்டத்தை மாலை ஒத்திப்போடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். காரணம் அந்த ஊரில் கோவாப்பரேட்டிவ் பாங்க் தேர்தல் என்று சொன்னார்கள். இதிலிருந்து எலக்ஷன் வந்தால் பூமிதான இயக்கத்தைத் தள்ளிப்போட வேண்டும் என்று தோன்றுகிறது. இந்தத் தேர்தல் சட்டசபை, பார்லிமெண்ட், ஜில்லா போர்டு என்றில்லாமல் கோவாப்பரேட்டிவ் பாங்க் அளவிற்கு, ஏதாவது ஒரு தேர்தல் முக்கியமாகப்போய்விட்டது. சென்ற முறை தேர்தல் வந்தபோது விநோபாஜி அவர்களையே விட்டுவிட்டுப் போய்விட்டார்கள். இதனால் மக்கள் எல்லோருக்குமே அதிகாரத்தில் ஆசை இருப்பதாக எடுத்துக்கொள்ளக் கூடாது. ஆனால் அவர்களுக்கு அதிகாரத்தில் நம்பிக்கை இருக்கிறது. அதிகாரத்தின் மூலம் தான் கிராம ராஜ்யம் உண்டாகுமென்று நம்புகிறார்கள்

**அன்பு வேண்டுமா, அதிகாரம் வேண்டுமா?**

"நான் ராஜபாளையம் சென்றபோது "உங்களூருக்கு மூன்றுவது முறையாக வருகின்றேன் நான் முன் தடவை வந்ததற்குப் பின்னால் இந்த 3 வருஷத்தில் என்ன செய்திருக்கிறீர்கள்? என்று கேட்டேன். அவர்கள் நம்பிக்கைப்படி மிகவும் பொருத்தமான ஒரு பதிலைச் சென்னார்கள். நாங்கள் செய்யவேண்டியது ஒன்றுமில்லை. சட்டம் போட்டு நிலங்களை எடுத்துக்கொள்ள வாய்ப்பு இருக்கும்போது எதற்காக நடந்து யாத்திரைகள் செய்து சிரமப்படவேண்டும். நிலப் பிரபுக்களிடம் எதற்காகக் கெஞ்சிக் கேட்கவேண்டும் என்று சொன்னார்கள். அதிகாரம் சட்டம் இவைகளின் மூலம் தீர்ப்பதா? அல்லது அன்பு அஹிம்சை மூலம் தீர்ப்பதா என்பதுதான் நம்முன்னுள்ள கேள்வி. நாட்டின் தந்தை என்று அழைக்கின்ற காந்திஜி என்ன சொல்கிறார்? பாரத நாட்டின் நம்பிக்கை எது? அன்பிலே நம்பிக்கையா, அதிகாரத்தில் நம்பிக்கையா? நாம் எதை விரும்புகின்றோம்? காந்திஜி சொன்ன ராமராஜ்யத்தையா? அல்லது அதிகாரம், சட்டத்தைக்கொண்ட ராஜ்யமா? பூமிதான ஊழியர்கள் எதை விரும்புகின்றார்கள்? அதிகாரத்தின் மூலம் காரியம் செய்வது புதிதல்ல, 1920ல் காந்திஜி சட்டசபைகளைப் பகிஷ்கரித்தார். அன்பின் மூலம் அஹிம்சையின் மூலம் விடுதலை பெறவேண்டுமென்று நினைத்தார். ஆனால் அதிலே அவர் தோல்வியுற்றார். ஏனென்றால் மக்கள் சட்ட சபை மூலம் காரியம் செய்ய வேண்டுமென்ற எண்ணத்திற்கு வந்துவிட்டார்கள்.

**மக்களிடையே சட்டசபை மோகம்**

மக்களிடத்திலே (பார்லிமெண்டரி மெண்டாலிடி) சட்ட சபை மோகம் வந்துவிட்டது, மக்கள் எல்லோரிடத்திலும் ஒரு மனப்பான்மை வந்துவிட்டது. அதை மாற்றுவதுதான் நம்முடைய வேலை. காந்திஜியே தோற்றுவிட்ட ஒரு காரியத்தில் விநோபாஜி அவர்கள் தோல்வியடைவார்கள் என்று முடிவு கட்ட முடியாது. ஏனென்றால் உலகம் முன்னேறிக்கொண்டே இருக்கிறது. எப்படி ராமராஜ்யம் வரும்? அன்பின் மூலம் அஹிம்சையின் மூலம்தான் வரமுடியும். ஆனால் இப்பொழுது சட்டத்தின் மூலம் க்ஷேமநல அரசாங்கம் (வெல்பேர் ஸ்டேட்) என்று பேசுகிறார்கள். அது சட்டத்தின் மூலம் ஏற்படுவது. ஆனால் சர்வோதய அடிப்படையில் வரும் ராமராஜ்யம் அன்பு சக்தியால் ஏற்படும்.

**இரண்டாம் நாள் மகாநாடு**

25-9-54ம் தேதி இரண்டாம் நாள் மகாநாட்டிற்கு காலை நடவடிக்கைகளுக்கு தமிழ்நாடு சர்க்கா சங்க பிரதிநிதி ஸ்ரீ அ. பாலகிருஷ்ண பிள்ளை தலைமை வகித்தார். "ராட்டையும், சர்வோதய லட்சியமும்" என்ற பொருள் பற்றிய விவாதத்தில் ஸ்ரீமான்கள் என். எஸ். சுப்பிரமணியம், வாகைத் தாவூர் ஆர். ஸ்ரீனிவாசன், சர்வோதய ஆசிரியர் என். ராமசாமி மற்றும் பல கதர் ஊழியர்கள் கலந்துகொண்டனர். பின்பு ஸ்ரீ சங்கர்ராவ்தேவ் தமிழ் நாட்டில் ஜனவரி 30க்குள் 2 லட்சம் சிட்டம் நூல் காணிக்கையாக வசூலிக்க கதர் அன்பர்களும், நிர்மாண ஊழியர்களும் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மாலை நடவடிக்கைகளுக்கு ஸ்ரீமதி அமிர்தா ராம சுப்பிரமணியம் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீமதி கமலாஸ்ரீனிவாசன், கஸ்தூரிபா நிதி ஸ்ரீமதி ரஞ்சிதம், ஸ்ரீமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன், ஸ்ரீமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் முதலியவர்களும் ஸ்ரீ முத்து எம். எல். ஏயும், "சர்வோதயத்தில் சமூக சமத்துவம் சர்வோதய கிராம அமைப்பு" என்னும் பொருள்கள் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டனர்,

**"தேர்தலுக்கு நிற்பதைவிட நிர்மாண வேலை செய்வதுமேல்:–" குன்றக்குடி அடிகளார்**

"ஸ்ரீல ஸ்ரீ குன்றக்குடி அடிகளார் மாலை கூட்டத்தில் கலந்துகொண்டு பூதான இயக்கத்தின் தார்மீகத் தன்மையையும், சர்வோதய லட்சியத்தின் சிறப்பையும் விரிவாக எடுத்து விளக்கினார். மக்கள் பிரார்த்தனையில் ஒன்றுபட்டு மதவாழ்க்கையை பின்பற்றினால் ஆண்டவனின் புத்திரர்கள் நாமனைவரும் என்ற எண்ணம் ஏற்பட்டு நமக்குள் சொத்தையும் செல்வத்தையும் பிரித்துக்கொள்ளும் மனோபாவம் தானே வந்துவிடும் என்று கூறினார். தேர்தலுக்கு நிற்காமல் பூதான இயக்கம் போன்ற நிர்மாணத் துறையில் பங்குகொண்டு வேலை செய்தாலேயே தொண்டு ஆகும் என்று கூறி கட்சி முதலிய பேதங்களை மறந்து அனைவரும் பூமிதான இயக்கத்தில் பங்குகொண்டு சர்வோதய சமுதாயம் சிருஷ்டிக்கும் முயற்சியில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ எம். எம். சுப்பிரமணியம் நன்றியறிதல் கூறிய பின்னர் சர்வோதய பிரார்த்தனைக்குப் பின் மகாநாடு கலைந்தது. — ச. ஜெகந்நாதன்

## ஸ்ரீ தேவ் சுற்றுப்பிரயாணத்தில் மதுரை ஜில்லாவில் 394 ஏக்கர் பூதானம்

**ஜில்லா பூதான யாத்திரை காசிபாளையத்தில் ஆரம்பம்**

ஸ்ரீ சங்கர்ராவ் தேவ் அவர்கள் பூமிதான சுற்றுப்பிரயாணம் மதுரை ஜில்லாவில் 21–9–'54ம் தேதி காலை திண்டுக்கல் தாலூக்காவில் காசிப்பாளையம் கிராமத்திலிருந்து ஆரம்பமானது. மதுரை ஜில்லா பூதான கன்வீனர் ஸ்ரீ முனகால பட்டாபிராமையா, ச. ஜெகந்நாதன் அவர்களும் ஸ்ரீ தேவுடன் சுற்றுப்பிரயாணத்தில் கலந்துகொண்டனர். 21–9–'54ம் தேதி காலை 10 மணிக்கு காசிப்பாளையத்தில் பூதானக் கூட்டம் நடந்தது. கூட்டத்தில் அந்தச் சிறிய கிராமத்தில் 2000 ஜனங்கள் கூடியிருந்தனர். ஆண்கள் பெண்கள் அனைவருமாகச் சேர்ந்து உற்சாகத்தோடு பூதானச் செய்தியைக் கேட்கக் கூடியிருந்தனர். ஸ்ரீ கிருஷ்ணசாமி ரெட்டியார், ஸ்ரீ கணேசய்யர், தாலூக்கா காங்கிரஸ் கமிட்டிக் காரியதரிசி டி. ராமசாமி, காந்தி கிராம டைரக்டர் ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் ஆகியவர்கள் கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

**சமத்துவம் ஏற்பட பூதானம்:**

ஸ்ரீ தேவ் அவர்கள் காசிப்பாளையத்தில் பூதானத்தின் லட்சியத்தைப்பற்றி பேசிவிட்டு பூதானத்திற்கு நிலம் கொடுப்பவர்கள் பூதான இயக்கத்தின் லட்சியத்தைப் புரிந்துகொண்டு கொடுக்கவேண்டும் என்றும் கோவில் மடங்களுக்குக் கொடுப்பதுபோலல்லாமல் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு, சமத்துவம் நிலவுவதற்காகக் கொடுக்கிறோம் என்ற உணர்வோடு புரிந்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். மேலும் அவர் நாட்டில் கிராமராஜ்யம் ஏற்பட, கிராமங்களில் விளையும் கச்சாப் பொருள்களை கிராமங்களிலேயே பூர்த்திப் பொருளாக்கவேண்டிய தொழில்கள் நடைபெற வேண்டுமென்றும், அவற்றையே கிராமவாசிகள் உபயோகிக்க வேண்டுமென்றும் இவற்றையெல்லாம் சுதேசி தர்மத்தோடு, அண்டை வீட்டுக்காரனுக்கு உதவி செய்யும் பாவத்தோடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீ முனகால பட்டாபிராமையா அவர்கள் பேசிய பிறகு ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் அவர்கள் பேசினார்கள்.

**கோனூர்**

மாலை 4 மணிக்கு கோனூரில் பூதானக் கூட்டம் நடந்தது. அங்கு 83 பேர்கள் 116 ஏக்கர் பூதானம் கொடுத்திருக்கின்றனர். சிறிய சிறிய விவசாயிகளும் தங்களால் முடிந்த அளவு தானம் தந்திருக்கிறார்கள்.

**பெரியகுளம்**

பெரியகுளத்தில் ஸ்ரீ தேவ் அவர்களை பெரியகுளம் நகர் பூதான கன்வீனர் ஸ்ரீ எஸ். வி. எம். ஹமீது சாஹிப், தாலுகா கன்வீனர் ஸ்ரீ வி. குருசாமி மற்றும் பிரமுகர்களும் பூர்ண கும்பத்துடன் வரவேற்றனர். இரவு 7 மணிக்கு நடந்த பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ தேவ் அவர்கள் பேசினார்கள்.

**எல்லோருக்கும் உழைக்க உரிமை**

ஒருவனுக்குப் பாடுபட முடிந்த அளவுதான் நிலம் சொந்தமாக இருக்கவேண்டும். பாடுபடாதவர்களிடம் நிலம் இருக்கக்கூடாது. அது இருக்கும் வரை நாட்டில் சுரண்டல் இருந்தேதான்தீரும். ஆகவே உழைப்பவர்களுக்குக் கருவியும் சாதனமும் சொந்தமாக இருக்கவேண்டும். உழைக்காதவர்களிடம் சாதனங்கள் உரிமையாக இருக்கும் நிலை போகவேண்டும். இதுதான் பூதான இயக்கத்தின் புரட்சி நோக்கு. பாடுபட்டால்தான் உணவு. எல்லோரும் பாடுபடவேண்டும். பாடுபடாதவனுக்கு உணவு கொள்ள உரிமை இல்லை. இந்த நிலை ஏற்பட்டுவிட்டால் முதலாளி தொழிலாளி என்ற வித்தியாசம் இராது.

பின்பு ஸ்ரீ ச. ஜெகந்நாதன் அவர்களும், ஸ்ரீ என். ஆர். தியாகராஜன் அவர்களும் பேசினார்கள்.

128 ஏக்கர் தானமாகக் கிடைத்திருப்பதாக கூட்ட இறுதியில் அறிவிக்கப்பட்டது.

22-ம் தேதி காலை 9 மணிக்கு திருமங்கலத்தில் ஆனந்தா டாக்கீஸில் பூதானக் கூட்டத்தில் ஸ்ரீ தேவ் குழுவினர். நகர, தாலுகா பிரமுகர்களும் ஊழியர்களும் வரவேற்றனர். அங்கு 63 ஏக்கர் கிடைத்திருப்பதாக அறிவித்தனர். மதுரை ஜில்லா யாத்திரை முடிந்து ஸ்ரீ தேவ் கோஷ்டியினர் ராமநாதபுரம் ஜில்லா நடையனேரிக்குப் பயணமாயினர்.

— ச. ஜெகந்நாதன்

## தீராத பிரச்னைகள்

**[வேறிடத்தில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களுடைய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டு நடவடிக்கைகளை வெளியிட்டுள்ளோம். இதே பிரச்னைகளுக்கு அவரளித்திருக்கும் பதில் சர்வோதயவாதிகளின் கவனத்திற்குரியன. காந்திஜியின் நிர்மாணத் திட்ட வேலைகளின் லக்ஷியத்தையும் பூமிதான யக்ஞம் போன்ற பரவலான தேசீய இயக்கங்களின் லட்சியத்தையும், சர்க்காரோ சட்டமோ செய்துவிட முடியாது!!**

ஆசிரியர்]

### காந்தி கிராமம், 7-ம் ஆண்டு விழா

தென்னிந்திய நிர்மாண வேலை ஸ்தாபனங்களில் மதுரை ஜில்லாவிலிருக்கும் காந்தி கிராமம் முக்கியமானதென்று தமிழ் மக்கள் அறிவார்கள். அதன் ஏழாம் ஆண்டு விழா சென்ற அக்டோபர் 7-ம் தேதி நடந்தேறியது. அன்று ஆண்டு விழாவையொட்டி அங்கு நடைபெற்ற நிர்மாண ஊழியர்கள் கூட்டத்திற்கு முன்னாள் பம்பாய் மாகாண முதலமைச்சராயும் சமீபகாலம் வரை லண்டனில் இந்தியாவின் ஹை கமிஷனராகவுமிருந்த ஸ்ரீ பி. ஜி. கேர் அவர்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவரிடம் விளக்கம் கோரி கேட்கப்பட்ட சில கேள்விகளையும் அவர் அளித்த பதில்களையும் கீழே தருகிறோம்.

**கேள்விகள்:**

1) காந்தி அடிகளின் தலைமையில் நிர்மாணத் திட்டங்களை வகுத்தவர்கள்தான் இன்று ஆட்சிபுரிகின்றனர். எனினும் ஏன் அவர்கள் நிர்மாணத் திட்டங்களைத் திறமையாகவும் முழுமையாகவும் நடத்துவதில்லை ?

2) லண்டனில் இந்தியாவின் ஹை கமிஷனராக இருந்த தாங்கள் உலகில் இன்று தோன்றியுள்ள தொழில் நுணுக்க முன்னேற்றங்களை நேரில் கண்டறிந்திருப்பீர்கள். காந்திஜியின் நிர்மாணத் திட்டங்களும் உலகில் தோன்றியுள்ள தொழில் நுணுக்க முன்னேற்றங்களும் ஏக காலத்தில் ஒத்துப்போக முடியுமா ?

3) காந்திய நிர்மாணத் திட்டங்களுக்கும் சமுதாய நல அபிவிருத்தி திட்டங்களுக்கும் முரண்பாடுகளுண்டா ?

**பதில்கள்:**

### மனக்குழப்பங்கள்

1) நான் நீண்ட நாட்களுக்கு பம்பாய் மாகாண முதலமைச்சராயிருந்தேன். என் மனதிலேயே அடிக்கடி தீவிரமான குழப்பங்கள் எழுந்ததுண்டு. எனக்கு காந்தியத் திட்டங்களில் முழு நம்பிக்கை இருந்த பொழுதிலும் நாடு அதை முழுமையாகப் பின்பற்றத் தயங்குகிறது என்பதை மறத்தலாகாது. ஆகையால் அடிக்கடி பல விஷயங்களை விட்டுக்கொடுக்க நேரிட்டது. நான் முதன் மந்திரியாக இருந்த பொழுது காந்திய நிர்மாணத் திட்டத்தை முழுமையாக நிறைவேற்றினேன் என்று சொல்வதற்கில்லை. ஆனால் அவைகளை உண்மையுடன் நிறைவேற்ற முயற்சி செய்தேன் என்று கூறலாம். இத்துறையில் வெற்றியும் தோல்வியும் மாறி மாறிக் கண்டேன்.

### பிளவுபட்ட மனோநிலை

மத்திய அரசாங்கத்தினுடையவும், மாகாண அரசாங்கங்களினுடையவும் மனம் இவ்விஷயத்தில் பிளவு பட்டிருக்கிறது. காந்தீயத் திட்டத்தில் நம்பிக்கை யில்லாதோர் பலர் சர்க்காரிலிருக்கின்றனர். பலருக்கு நம்பிக்கை உள்ளது. ஆகையால் காந்தீயத் திட்டத்தை அமுல் நடத்த சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பல எடுக்கப்படவில்லை. காலம் போகப்போக காந்தீய திட்டங்கள் மேலும் மேலும் அமுலாகிவரும். ஏனென்றால் சுரண்டலற்ற ஒரு சமூகத்தை அமைதியாக நிறுவுவதற்கு வேறு திட்டங்களில்லை.

### தொழில் நுணுக்கங்களும் காந்திய நிர்மாணத்திட்டமும்

2) மேனாடுகளில் சமீப காலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் நுணுக்க முன்னேற்றங்களை நான் கண்டேன். அவைகளைக் காணக் காண எனக்கு காந்தியத் திட்டங்கள்தான் மனித சமூகத்திற்கு நன்மை தரும் என்ற நம்பிக்கை மேலும் மேலும் பலப்பட்டது. தொழில் நுணுக்க முன்னேற்றங்களை முற்றிலும் புறக்கணிப்பது காந்தியத் திட்டத்தின் நோக்கமல்ல. தொழில் நுணுக்க முன்னேற்றத்தின் பயனாக மனிதன் தனது தன்மையை இழக்கலாகாது என்பதே நமது கோட்பாடு. மனித உணர்ச்சியை இழந்து தொழில் நுணுக்கங்களைப் பெறுவதினால் பயனில்லை.

### ஆன்மாவை இழந்த இயந்திர மனிதன்

மேனாடுகளில் இன்று ஏற்பட்டுள்ள முன்னேற்றங்களின் பயனாக மனிதன் தனது ஆத்மீகத் தூய்மையை பெரிதும் இழந்துவிட்டான் என்று கூற நான் பெரிதும் வருந்துகிறேன். காந்திய கொள்கைகளைக் கடைபிடிப்பதால் தொழில் நுணுக்கங்களை முற்றிலும் புறக்கணிக்க வேண்டும் என்பதில்லை. மனித வளர்ச்சிக்கு அவைகளைக் கட்டுப்பாட்டுடன் ஏற்றுக்கொள்ளலாம். காந்தீயத் திட்டத்தினால்தான் இந்த தொழில் நுணுக்கங்களையும் மனிதன் ஆன்ம வளர்ச்சியையும் இணைத்து இயங்கச்செய்ய முடியும்.

### கருத்து வேற்றுமைகள் மனதில் எழுகின்றன.

3) சமுதாய நல அபிவிருத்தித் திட்டத்திற்கும் காந்தீய நிர்மாணத் திட்டங்களுக்குமிடையே முரண்பாடுகள் தோன்றுவது தவிர்க்க இயலாதது. ஏனெனில் மக்களின் மன நிலையிலேயே இவ்வேறுபாடுகளிருக்கின்றன. தேசிய அபிவிருத்தி வேலைகளில் சில பகுதிகளை ஒரு சிலரும் மற்ற சில பகுதிகளை வேறு சிலரும் வலியுறுத்தி வருகிறார்கள். ஆனால் காந்தி கிராமம் போன்ற ஒரு ஸ்தாபனம் இரு சாராரது கருத்துக்களையும் இணைக்க முயலவேண்டும். காந்தீய நிர்மாண திட்டங்களும் சர்க்காரின் சமுதாய நல அபிவிருத்தித் திட்டங்களும் ஒன்று மற்றொன்றின் குறைகளைப் போக்க முயல்வதினால் இரண்டும் பலம் பெறலாம்.

★

## பூமிதானமும் மேல் நாடுகளும்!

மேனாட்டினர் பூமிதான இயக்கத்தை வெறும் கற்பனையாகக் கருதுகிறார்கள். காந்தியடிகளுடைய அஹிம்சா போராட்டத்தையும் அவர்கள் இவ்விதமே கருதினார்கள். அஹிம்சா போராட்டத்தின் மூலம் நமக்கு ஒரு புதிய வழியைக் காட்டிய இந்தியா, பொருளாதாரத் துறையிலும் வியக்கத்தக்க ஒரு வழியை உலகிற்கு காட்டக்கூடும் என்ற வாய்ப்பை யார் மறுக்கக் கூடும் !

— டாக்டர் வில்பான்

(இந்தியாவில் முந்நாள் யுகோஸ்லேவிய பிரதிநிதி)

## 2-வது தமிழ்நாடு சர்வோதய சம்மேளனத்தின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

1. அகில இந்திய ரீதியில் எல்லா நிர்மாண சங்கங்களும் ஒன்றுபட்டு சர்வோதய லட்சியத்தை குறியாகக்கொண்டு அகில இந்திய சர்வ சேவா சங்கமாக இணைந்திருப்பதை சம்மேளனம் வரவேற்கிறது.

தமிழ்நாட்டில் நிர்மாண வேலைகள் போற்றத்தக்க முறையில் இதர மாகாணங்களுக்கு எடுத்துக்காட்டாக நடைபெற்று வருகின்றன. ஆயினும் எல்லாச் சங்கங்களும் இணைந்து ஒரே நோக்குடன் வேலை செய்வதின் அவசியத்தை உணருகிறோம். சுயராஜ்ய லக்ஷியம் பூர்த்தியான பிறகு இனி நம்முடைய லக்ஷியம் சர்வோதயமாகும். ஆகையால் தமிழ் நாட்டிலுள்ள சர்க்கா சங்கம், ஹரிஜன சேவா சங்கம், ஆதாரக் கல்வி சங்கம், ஹிந்தி பிரசார சபை, கஸ்தூரிபா நிதி, காந்தி நினைவு நிதி முதலிய ஸ்தாபனங்கள் தார்மீக ரீதியில் ஒன்றுபட்டு இயங்க வேண்டும்.

இதற்கு வழி வகுக்கவும், திட்டங்கள் செய்யவும் தமிழ் நாட்டு சர்வ சேவா சங்கப் பிரதிநிதி ஸ்ரீ அ. பாலகிருஷ்ண பிள்ளை, சர்வோதய சமாஜத் தலைவர் ஸ்ரீ அ. வேதரத்னம் பிள்ளை, ஹிந்தி பிரசார சபையைச் சேர்ந்த ஸ்ரீ அவதானந்தன், ஹரிஜன் சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ எல். என். கோபால்சாமி, தமிழ் நாடு காந்தி நினைவு நிர்வாகி ஸ்ரீ என். எம். ஆர். சுப்பராமன், கஸ்தூரிபா நிதி ஏஜண்டு ஸ்ரீமதி வி. ராஜலக்ஷ்மி அம்மாள், எம். ஜி. சங்கர ரெட்டியார், தமிழ் நாடு பூமிதான யக்ஞக் கமிட்டிக் கன்வீனர் ஸ்ரீ எஸ். ஜெகந்நாதன் ஆகியவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

2. இவ்விதம் நிர்மாண ஸ்தாபனங்கள் இணைந்த தமிழ் நாடு சேவா சங்கம் ஒவ்வொரு வருஷமும் இத்தகைய சம்மேளனத்தை கூட்ட உதவி செய்யும்.

ஜனவரி மாதம் 31-ம் தேதியிலிருந்து பிப்ரவரி மாதம் 12-ம் தேதி வரை சர்வோதய பக்ஷத்தில் தமிழ் நாடு முழுவதும் சர்வோதய மேளா நடத்தி நூல் காணிக்கைக்காக இரண்டு லக்ஷம் சிட்டங்கள் சேர்க்கவும் ஏற்பாடு செய்யும்.

3. பூமிதான யக்ஞம் தேசிய இயக்கமாகவும், தேசத்தின் சங்கற்பமாகவும் இருப்பதால் எல்லாச் சங்கங்களும் பூதான இயக்கத்தைப் பலப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

காந்தி கிராமம், 27—9—54.

**ச. ஜெகந்நாதன்,**
கன்வீனர், தமிழ் நாடு பூதானக் கமிட்டி.

●

## ராமனுதபுரம் ஜில்லாவில் 2 நாட்களில் 222 ஏக்கர் பூதானம்

"நிலம் கேட்க வந்தால் சட்டம் போட்டு எடுத்துக் கொள்ளச் சொல்வது நியாயமா?" — **ஸ்ரீ தேவ்**

### ராமனுதபுரத்தில் யாத்திரை

22/23—9—'54 தேதிகளில் இராமனுதபுரம் ஜில்லாவில் ஸ்ரீ தேவ் அவர்கள் நடையனேரி, நத்தம்பட்டி, புதுப்பட்டி, மம்சாபுரம், முகவூர், ராஜபாளையம், சாத்தூர் முதலிய இடங்களுக்கு விஜயம் செய்து பூமிதான இயக்கப் பிரசாரம் செய்தார். ஸ்ரீ ச. ஜெகந்நாதன், ராமனுதபுரம் ஜில்லா பூதான கமிட்டிக் கன்வீனர் ஸ்ரீ ரா. கிருஷ்ணசாமி நாயுடு எம். எல். ஏ., ஜில்லா பூதான ஆர்கனைசர் ஸ்ரீ டி. டி. திருமலை ஆகியவர்கள் தேவுடன் சுற்றுப் பிரயாணத்தில் கலந்துகொண்டனர்.

### பூமிதானம் கேட்க சட்டம் போட சொல்லுகிருர்கள்!!

"கேட்க வந்திருக்கும் எங்களிடம் சட்டம் மூலம் எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னால் சிறிதளவாவது நீங்கள் பலாத்காரத்தை விரும்புவதாக அர்த்தம். எடுத்துக் கொள்ளலாம் என்று எப்போது சொல்கிருர்களோ அப்போதே நிலம் அவர்களது இல்லை என்பதை ஒத்துக்கொள்கிருர்கள் என்று ஆகிறது. நாளை கொடுக்கப்போகிறீர்கள். சட்டத்தாலோ பலாத்காரத்தாலோ நிலத்தை இழக்க இருக்கும் நீங்கள் ஏன் இன்றே சந்தோஷத்தோடு கொடுக்கக்கூடாது" என்று ஸ்ரீ தேவ் அவர்கள் நிலச்சுவான்தார்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

புதுப்பட்டியிலும், முகவூரிலும் கிராம ஜனங்கள் ஆண்களும், பெண்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து பூமிதானக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

### ஒரு ஏக்கர் உள்ளவரின் 10 சென்ட் தானம்

நத்தம்பட்டி கிராமத்தில் ஸ்ரீ தேவ் அவர்களின் கூட்டத்தில் ஸ்ரீ மு. அய்யனுர் தேவர் என்பவர் தனக்குச் சொந்தமாக உள்ள ஒரு ஏக்கர் நிலத்தில் 10 சென்டை பூதானத்திற்குக் கொடுத்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. இவ்வாறு சிறிய விவசாயிகளும் தங்களால் முடிந்த அளவு இயக்கத்தில் பங்கு கொள்ள முன்வந்திருக்கின்றனர். ஸ்ரீ சேத்தூர் ஜமீன்தார் அவர்கள் 100 ஏக்கர் பூதானமளிப்பதாக முகவூர் கூட்டத்தில் அறிவிக்கப்பட்டது.

★

## இராமனுதபுரம் ஜில்லாவில் கிடைத்த பூமிதான விபரம்

| | | |
|---|---|---|
| நடையனேரி | ஸ்ரீ சா. ரெங்கசாமி நாயக்கர் | 1 87 |
| குமிளங்குளம் | ,, ஆர். ராமசாமி, சீதாலட்சுமி | 1 32 |
| ,, | ,, மு. ராமசுப்பு நாயக்கர், ,, மு. சுப்பா நாயக்கர் | 3 00 |
| புதுப்பட்டி | ,, வெ. ருத்ரப்ப நாயக்கர் | 2 60 |
| குமிலாங்குளம் | ,, வெங்கடராயலு நாயக்கர் | 1 30 |
| நடையனேரி | ,, எல். சுப்பராயலு | 0 60 |
| கிருஷ்ணபுரம் | ,, சி. சண்முகத் தேவர் | 0 59 |
| சொரைக்காய் பட்டி | ,, சின்னக்கருப்பன் செட்டியார் | 2 32 |
| குன்னூர் | ,, மீ. சிவகுருநாத பிள்ளை | 1 99 |
| நத்தம்பட்டி | ,, அ. கு. சுப்பிரமனிய நாடார் | 0 73 |
| ,, | ,, கே. தங்கையா நாடார் | 0 20 |
| கட்டையத்தேன் பட்டி | ,, கே. சங்கையாத் தேவர் | 1 00 |
| நத்தம்பட்டி | ,, சா. செபஸ்தியன் | 0 20 |
| ,, | ,, சா. ராஜு என்ற செபஸ்தியான் | 0 20 |
| ,, | ,, மு. அய்யனுர் தேவர் | 0 10 |
| தைலாபுரம் | ,, மைனர் பொன்னுராஜ் என்ற திருமால் கார்டியன் அழகுமலைத் தேவர் | 1 25 |
| கிருஷ்ணபுரம் மங்கலம் | ,, க. செல்லையா என்ற சின்னையாத் தேவர் | 1 68 |
| வலையங்குளம்-அரசபட்டி | ,, தி. சுப்பிரமணிய பிள்ளை | 0 76 |
| வெள்ளைபொட்டல் | ,, கா. அய்யனுர் நாயக்கர், கா. குருசாமி நாயக்கர் | 4 88 |
| சேஷபுரம் | ,, வி. ஏ. அழகிரிசாமி | 2 15½ |
| புதுப்பட்டி | ,, வி. ஆர். வீராசாமி | 2 15½ |

| | | | |
|---|---|---|---|
| மகாராஜபுரம் | ஸ்ரீ டி. அழகிரிசாமி நாயுடு, ஸ்ரீமதி ஜி. ஏ. குப்பம்மாள், ,, சி. வெங்கிட்டம்மாள், | 2 | 98½ |
| புதுப்பட்டி | ஸ்ரீ கோ. வி. அழகிரிசாமி நாயுடு | 2 | 15½ |
| ,, | ,, கொ. சி. வி. சங்கரமூர்த்தி நாயுடு | 1 | 37 |
| ,, | ,, எஸ். ஞானமுத்தையாத் தேவர், ,, எஸ். குழந்தைசாமித் தேவர் | 0 | 44 |
| வத்திராயிருப்பு | ,, என். பெருமாள்சாமித் தேவர், | 1 | 00 |
| | ,, ஷியார் மனைவியார், வி. தேவ குஞ்சர நாச்சியார் | 2 | 50 |
| புதுப்பட்டி | ,, வி. வி. சுப்பையா கி. மு. | 1 | 00 |
| மம்சாபுரம் | ,, வ. நீராத்திலிங்கத் தேவர் | 1 | 73 |
| ,, | ,, ப. குழந்தைவேல் நாடார் | 2 | 00 |
| ,, | ,, எஸ். கந்தசாமி பிள்ளை | 0 | 48 |
| ,, | ,, சு. ஷண்முகம் பிள்ளை | 0 | 50 |
| ,, | ,, எஸ். ஆர். ஸ்ரீனிவாசன், ,, எஸ். பி. எஸ். வெங்கிடபதி | 1 | 00 |
| முகவூர் | ,, தா. ச. சங்கரப்ப நாயுடு | 1 | 83 |
| ,, | ,, சி. வீராசாமி நாயுடு, ,, ரு. அய்யப்ப நாயுடு | 0 | 75 |
| ,, | ,, கோதையம்மாள் | 1 | 99 |
| ,, | ,, மு. பா. வீரப்ப நாயுடு | 0 | 69 |
| தேவதானம் | ஸ்ரீமதி அ. எல்லம்மாள் | 0 | 86 |
| ,, | சேத்தூர் ஜமீன்தார் ஸ்ரீ வி. டி. எஸ். சேஷபாண்டியத் தேவர் | 100 | 39 |
| கொம்மத்தாபுரம் | ஸ்ரீ ஆர். பாலகிருஷ்ண நாயுடு | 1 | 28 |
| ,, | ,, ஆர். வெங்கிடசாமி நாயுடு | 1 | 28 |
| ,, | ,, ஏ. ஆத்மநாத நாயுடு | 1 | 48 |
| ,, | ,, பா. சங்கரப்ப நாயுடு | 0 | 78 |
| மேட்டுப்பட்டி | ,, வெ. கந்தசாமித் தேவர் | 1 | 83 |
| ,, | ,, ரா. ராமகிருஷ்ண நாயுடு | 2 | 09 |
| மாசார்பட்டி | ,, அ. ரா. சு. சுப்பநாயக்கர் | 10 | 30 |
| ஒ. மேட்டுப்பட்டி | ,, வ. ச. வேங்கிடசாமி நாயக்கர் | 2 | 15 |
| ,, | ,, வ. சு. வெங்கிடசாமி நாயக்கர் | 1 | 85 |
| ,, | ,, சி. பூ. ராமசாமி நாயக்கர் | 1 | 60 |
| ,, | ,, சி. பூ. குருசாமி நாயக்கர் | 1 | 24 |
| ,, | ,, தே. அ. கந்தசாமி நாயக்கர் | 0 | 78 |
| அருப்புக்கோட்டைத் தாலூக்காவில் கிடைத்தது | | 40 | 00 |
| நத்தம்பட்டி | ஸ்ரீ ச. பழனிவேல் நாடார் கலப்பை செட் | 1 | |
| ,, | ,, க. பாக்கிய நாடார் ,, | 1 | |
| ,, | ,, க. நவநீத கிருஷ்ண நாடார் ,, | 1 | |
| ,, | ,, ரெ. வேலாயுத நாடார் ,, | 1 | |
| ,, | ,, க. ச. ரத்தினசாமி நாடார் மண் வெட்டி | 1 | |
| ,, | ,, க. செல்லக்கனி நாடார் ,, | 1 | |
| முகவூர் | ஸ்ரீ வ. கழுவனமூர்த்திலிங்கம் பிள்ளை, ,, பொ. நீ. பொ. நீர்காத்தலிங்கம் பிள்ளை | ரூ. 150 பெருமான 2 மாடுகள் | |
| ,, | ,, எஸ். சின்னசாமி ரூ. 10 பெருமான கலப்பை செட் | 2 | |
| ,, | ,, டி. பி. பால்ச்சாமி நாடார், ,, என். சீனியப்ப நாடார், ,, நா. சோலையப்ப நாடார் | ரூ. 200 மதிப்புள்ள வண்டி 1 | |

காந்திகிராமம், 27—9—'54.

**ச. ஜெகந்நாதன்,**
கன்வீனர், தமிழ்நாடு பூமிதானக் கமிட்டி.

○

## 20 ஆரம்ப ஆசிரியர்களின் சம்பத்துதானம்

### திருப்பூர் ஆரம்ப ஆசிரியர் சங்கத்தில் காந்தி ஜெயந்தி விழா விளைவு

திருப்பூர் ஆர். ஸி. எலிமெண்டரி பாடசாலை ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் சார்பில் அக்டோபர் 2-உ சனிக்கிழமை காலை 9-மணிக்கு பல்லடம் தாலூகா பூமிதான யாத்திரை கோஷ்டித் தலைவர் ஸ்ரீ தி. கி. ராமன் அவர்கள் தலைமையில் காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டது. நூற்பு வேள்வியுடன் கூட்டம் ஆரம்பமாயிற்று. கோவை ஜில்லா பூமிதான கமிட்டி ஆர்கனைசர் ஸ்ரீ டி. பி. ராமசாமி அவர்கள், காந்தியடிகளும், மனிதவாழ்க்கையும் பற்றி உருக்கமாகப் பேசினார். மற்றும் சங்கத்தலைவர் என். ரெங்கசாமிச் செட்டியார் பி. ஏ. எல். டி. காரியதரிசி பி. முத்தையா, ஆசிரியர்கள் ஸ்ரீ பி. ஆர். பொன்னுச்சாமி, ஸ்ரீ சோமசுந்தரம் ஆகியோரும் பேசினார்கள்.

கூட்டமுடிவில் விழாத் தலைவரிடம் ஆசிரியர்களும் ஆசிரியைகளும் (20 பேர்) பெருமித உணர்ச்சிததும்ப தங்கள் தங்கள் மாதச்சம்பளத்தில் பிரதிமாதமும், பூமிதான லட்சியம் பூர்த்தி அடையும்வரை பூஜ்ய விநோபாபாவே அவர்களுக்கு, சம்பத்துதானம் அளித்துவருவதாக அறிவித்துக்கொண்டனர். திருப்பூர் ஆரம்ப ஆசிரியர் ஆசிரியைகள் அனைவருள்ளத்திலும் பதிந்திருந்த காந்தீய பக்தி, தியாக உணர்ச்சி, தேசநலத்தைப் பற்றிய அக்கரை, எதிர்கால மன்னர்களாகிய நம் நாட்டின் தங்க மதலையர்பால் கொண்டுள்ள பற்று இவைகளெல்லாம் அவர்கள் தானத்தின் மூலம் பொலிவுற்றது.

கீழே, ஆசிரிய ஆசிரியர்களின் தான விபரம் தரப்படுகின்றது:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | ஸ்ரீ பி. முத்தையா, காரியதரிசி | | 1 | 0 | 0 |
| 2 | ,, எம். ராஜமாணிக்கம் — பொக்கிஷதார் | | 0 | 8 | 0 |
| 3 | ,, பி. பால்சமாதானம் — உப காரியதரிசி | | 0 | 8 | 0 |
| 4 | ,, பி. ராஜாமணி — | ஆசிரியர் | 0 | 8 | 0 |
| 5 | ,, ஆர். எல். வி. ராவு | ,, | 0 | 4 | 0 |
| 6 | ,, டி. வி. கிருஷ்ணமூர்த்தி ராவு | ,, | 0 | 8 | 0 |
| 7 | ,, வி. சிகாமணி | ,, | 0 | 8 | 0 |
| 8 | ,, எஸ். அருளானந்தம் | ,, | 0 | 8 | 0 |
| 9 | ,, ஆர். பாலகிருஷ்ணன் | ,, | 0 | 8 | 0 |
| 10 | ,, எம். தெய்வ சிகாமணி | ,, | 0 | 8 | 0 |
| 11 | ,, ஸி. சுப்பராய சேர்வை | ,, | 0 | 8 | 0 |
| 12 | ,, பி. ராமானுஜம் | ,, | 0 | 8 | 0 |
| 13 | ,, பி. ஆர். பொன்னுச்சாமி | ,, | 0 | 8 | 0 |
| 14 | ஸ்ரீமதி ஆர். முத்துலட்சுமி | ஆசிரியை | 0 | 8 | 0 |
| 15 | ,, கிருஷ்ணம்மாள் | ,, | 0 | 8 | 0 |
| 16 | ,, டி. ராஜம்மாள், | ,, | 0 | 8 | 0 |
| 17 | ,, ஆர். நாச்சாரம்மாள் | ,, | 0 | 8 | 0 |
| 18 | ,, டி. ஏசுரத்தினம் | ,, | 1 | 0 | 0 |
| 19 | ,, கே. கௌரியம்மாள் | ,, | 1 | 0 | 0 |
| 20 | ,, எம். அன்னமேரி | ,, | 0 | 8 | 0 |
| | மொத்தம் | | 11 | 0 | 0 |

மேலும் பலர், பூமிதான இயக்கத்தின் மனமாற்றப் புரட்சியின்பால் தங்கள் அனுதாபத்தை வெளியிடும் வகையில் முன்வந்து சம்பத்து தானம் அளிக்கப் போகின்றனர் என்ற தன் நம்பிக்கையைக் காரியதரிசி தெரிவித்து நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

— டி. பி. ராமசாமி

# மூன்று மாத ஊழியர் பயிற்சி முகாம்-திறப்பு விழா

## தமிழ்நாட்டு காந்தி நினைவு நிதி

மதுரை ஜில்லா நிர்மாண ஊழியரகத்தில் காந்தி நினைவு நிதியின் மூன்று மாதப் பயிற்சி முகாம் திரு. ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. முகாம் நிர்வாகி திரு. மரு. பழனிச்சாமி, அவர்களின் வரவேற்பு பிரசங்கத்தில் இப்பயிற்சி தனி மனிதன் தன் சக்தியை உணர்ந்து தன்னம்பிக்கையுடன் பற்றற்ற முறையில் பணியாற்றவேண்டும் எனக் குறிப்பிட்டார், முன்பு வெள்ளையர் ஆண்டனர். ஆனல் சுதந்திர இந்தியாவில் கருப்பர் ஆள்கின்றனர். சட்ட திட்டங்கள் முன்பு இருந்தபடியே வசதியுள்ளவர்களுக்குச் சாதகமாக இருக்கிறது. கிராமங்களில் சென்று சர்வோதயக் கொள்கைகள் நிர்மாணத் திட்டங்கள் இவைகளைப் பரப்புவதே இப்பயிற்சியின் நோக்கம். நகரங்களில்தான் பணம், வசதி, அதிகாரம் இவைகளெல்லாம் குவிந்து கிடக்கின்றன என்பது ஒருபுறமிருக்க, கிராமங்களில் ஒரு சில மனிதர்கள் கையில்தான் அதிகாரம், நிலம், பொருள் யாவும் குவிந்து கிடக்கிறது. இம்மாதிரியுள்ள கிராமங்களில் மேலே கண்ட தனி மனிதர்கள் அனுமதி பெறுமல் எந்த ஆக்க வேலையும் செய்ய இயலாது. கிராமங்களில் ஆரம்பிக்கும் வேலைகள் ஆரம்பித்தவர்கள் இருக்கும் வரை உயிருள்ளதாகச் செயல்படுகிறது. ஆனல் அவர்கள் கிராமத்திலிருந்து வந்ததும் அது நின்றுவிடுகிறது. இக்குறைபாட்டைப் போக்குவதே இப்பயிற்சியின் நோக்கமாக இருக்கும்.

## பாரெல்லாம் போற்றும் பாரதம்

பின்பு திரு. ச. ஜெகந்நாதன் அவர்கள் முகாமை ஆரம்பித்து வைத்தார்கள். தனது ஆரம்ப உரையில்:— "இந்தியா, உலக அரசியலில் இன்று பெரும் புகழுடன் திகழுவதற்குக் காரணம் நேருஜியின் சமாதானமான அன்பு, ஒத்து வாழ்தல் இவைகளின் அடிப்படையில் அமைந்த வெளிநாட்டுக் கொள்கையே. அதே போல் உள்நாட்டிலும் பொருளாதார ஏற்றத்தாழ்வு நீங்கி மக்கள் சுபிட்சத்துடன் வாழ பூதான இயக்கம் வினேபாஜியால் நடத்தப்பட்டு வருகிறது. அதன் மூலம் சர்வோதய சமுதாயத்தை சிருஷ்டிப்பதுதான் காந்திய வழியில் வாழும் நிர்மாண ஊழியர்களின் கடமையாகும். ஆகவே பலனேயோ ஊதியத்தையோ எதிர்பாராமல் இத்துறையில் பாடுபட பயிற்சி கொடுக்கப்படும்" என்று கூறினர்.

## தன்னை மாய்த்தும் பிறருக்கு உதவுங்கள்

பின்னர் பிரஜா சோஷலிஸ்ட் கட்சித் தலைவர் ஸ்ரீ எஸ். ஆர். சுப்பிரமணியம் அவர்கள் பேசுகையில், குத்துவிளக்கடியில் நம் நாட்டின் அரும்பெரும் புதல்வர்கள், மகாவீரர், புத்தர் இன்னும் பலர் ஞானத்தைப் பரப்பியிருக்கின்றனர் என்றும் இதே குத்துவிளக்கடியில் நல்ல முறையில் பயிற்சி பெற்று ஊதுபத்தி பிறருக்கு வாசனை கொடுத்து எப்படித் தன்னை அழித்துக் கொள்கிறதோ அதேபோல் பயிற்சியாளர்கள் சுயநலத்தை மறந்து உலகிற்குப் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

## எளிய தொழில்கள் மூலம் பெரிய பயிற்சி

அடுத்தாற்போல் பேசிய ஸ்ரீ ஜி. ராமச்சந்திரன் அவர்கள் காந்திய நிர்மாண வேலையில் நூல் நூற்றல் மிகவும் அடிப்படையான அவசியமான கடமையென்றும் அதை முழுமன ஈடுபாட்டுடன் செய்தால் அதைச் சுற்றியிருக்கும் மற்ற வேலைகள், தத்துவங்கள் எல்லாம் இலகுவாகப் புரிந்துவிடுமென்றும் ஆகவே பயிற்சிக்கு வந்திருக்கும் மாணவர்கள் இந்த மூன்று மாதங்களுக்குள் குறைந்த பட்சம் நன்ருய் கொட்டை நீக்கல், பட்டை போடுதல், நூல் நூற்றல் இவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

வந்திருந்த அனைவருக்கும் நன்றி கூறி ஸ்ரீமதி கிருஷ்ணம்மாள் ஜெகந்நாதன் அவர்கள் பேசும்போது கடமையுணர்ச்சி, கட்டுப்பாடு, சிக்கனம், தேவையைச் சுருக்கிக்கொள்ளல் முதலிய நல்ல பழக்கங்களை கடைபிடித்து வாழப் பழகிக்கொள்ள வேண்டுமென்று மாணவர்களைக் கேட்டுக்கொண்டார்.

நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

ஊழியரகம்.
30—9—'54

— மரு. பழனிச்சாமி

## "பூமிதான யக்ஞம், ஒரு உலக இயக்கமாகும்" சாத்தியக்கூறுகள் இருக்கின்றன.

— ஜெயப்பிரகாஷ்.

15 நாட்கள் கேரள மாகாணத்தில் பூமிதான யக்ஞ யாத்திரை செய்தபின், சென்ற அக்டோபர் 7-ம் தேதி திருவனந்தபுரத்தில் பத்திரிகை பிரதிநிதிகள் கூட்டத்தில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் நாராயணன் பேசியதின் சுருக்கத்தை கீழே தருகிறேம்:

### பூமிதான யக்ஞம் அமைதியான சமூகப் புரட்சிக்கு அடிகோலுகிறது

"இதுவரை உலகம் கண்டறியாத ஒரு புரட்சி இயக்கம் பூமிதான யக்ஞம். அதன் மூலம் சமூகத்தில் சுயமாகவே மாறுதல்களை ஏற்படுத்தலாம். இந்த இயக்கம் இந்தியாவில் வெற்றி பெற்ருல் உலகுக்கே சிறந்த ஒரு வழிகாட்டியாகும்.

மக்களுக்கு பூமிதான யக்ஞ இயக்கத்தில் நம்பிக்கையும், உற்சாகமும் வளர்ந்து வந்துள்ளது. தியாகத்தை அடிப்படையாகக்கொண்ட ஒரு இயக்கத்தில் மக்களுக்கு இவ்வளவு உற்சாகம் இருப்பதானது தேசத்தின் எதிர்காலத்தில் நம்பிக்கை ஊட்டுகிறது. சட்டம் பூமிதான யக்ஞ இயக்கத்திற்கு துணையாகத்தானிருக்கமுடியும். ஏனெனில் சட்டம் செய்ய இயலாத பல காரியங்களை பூமிதான யக்ஞம் மூலம் செய்யவேண்டுமென்று விரும்புகிறேம். இந்த இயக்கம் நிலத்தை பங்கீடு செய்யும் நோக்கத்துடன் மட்டும் தொடங்கப்படவில்லை. மக்களின் வாழ்க்கையை சீர்திருத்தும் நோக்கத்தோடுதான் இயக்கம் நடைபெற்று வருகிறது. இதை சட்டத்தின்மூலம் சாதித்தல் அரிது. நிலப்பங்கீடு விஷயத்தில், இதன் பயனுக நாம் நிலத்தை ஊர்ப்பொதுவாக்குவதைத்தான் அடையமுடியும்.

### ஊர்ப்பொதுவாகும் நிலத்திற்கும்—கூட்டுப் பண்ணைகளுக்கும் வித்தியாசமுண்டு

நிலத்தை ஊர்ப்பொதுவாக்குவதற்கும் சோவியத் ருஷ்யாவில் கூட்டுப்பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டதற்கும் முற்றிலும் வித்தியாசம் இருக்கிறது. நாம் தற்சமயம் தனி நபர்களுக்குச் சொந்தமான நிலத்தை யாதொரு நிர்ப்பந்தமுமின்றி ஊருக்குச் சொந்தமாக்கவேண்டும் என்று விரும்புகின்றேம்.

# தமிழ்நாட்டில் 86-வது சர்க்கா ஜயந்தி.

**சென்னை**

தக்கர் பாபா வித்தியாலயத்தில் 24 மணி நேர விடாத நூற்புவேள்வி நடைபெற்றது. 6 ராட்டைகள் கலந்துகொண்டன. மாணவர்களால் 130 சிட்டம் நூல் நன்கொடையாக கவர்னருக்கு அனுப்பப்பட்டது.

— அ. ராமசாமி அய்யர்

**கரூர்**

காந்தி ஜயந்தியை முன்னிட்டு பிரார்த்தனை, நூற்பு வேள்வி முதலியன நடைபெற்றன. அன்று நாகம்பள்ளி ஸ்ரீ பொன்னுசாமிக் கவுண்டர் 1 ஏக்கர் 15 செண்டு நிலதானம் வழங்கினர். சர்வோதய மேளாவுக்கு 33 சிட்டம் நூல் காணிக்கையும், கிராமோதய சந்தா 67ம் சேர்க்கப்பட்டது.

— சி. சாரங்கன்

**சங்கரன்கோயில்**

பள்ளி மாணவர்கள் 50க்கு மேற்பட்டவர்கள் சர்வ சேவா சங்க ஊழியர்களுடன் சேர்ந்து நூற்பு, வேள்வி, பிரார்த்தனை ஆகியவற்றில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

— ப. மாணிக்கம்

**திருநெல்வேலி**

காந்தி ஜயந்தியன்று கதர் உண்டியல் விற்பனை ஆரம்பித்து வைக்கப்பட்டது, நூல் காணிக்கை 67 சிட்டமும், சிவசைலத்தில் ஒரு கிராமோதயக் கதர் சங்கமும் ஆரம்பிக்கப்பட்டது.

— தி. கௌரி

**கரிவலம்வந்தநல்லூர்**

சர்வ சேவா சங்க ஊழியரும், கிராமோதய சங்க அங்கத்தினர்களுமாகச் சேர்ந்து நூற்பு வேள்வி, பூமிதானப் பிரசாரத்துடன் சேரி துப்புரவு, கிணறு துப்புரவு ஆகிய வேலைகளும் செய்யப்பட்டன. அத்துடன் கிராமோதயத்திற்கு 26 சந்தாவும், சர்வோதயத்திற்கு 11 சந்தாவும் சேர்க்கப்பட்டன.

— ஏ. எஸ் மாணிக்கம்

**சிவகாசி**

வடமலேபுரம், நாராணபுரம் ஆகிய கிராமங்களில் சேரித் துப்புரவு, நூற்பு வேள்வி, பொதுக்கூட்டம் முதலியன நடத்தி நூற்புப் போட்டியும் வைத்து தேரியவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன.

— எஸ். பழனிச்சாமி

**வத்திராயிருப்பு**

இவ்வூரில் உள்ள கிராம சங்கத்தின் சார்பில் சர்க்கா ஜயந்தியும், சங்கத்தின் ஆண்டு விழாவும் சேர்த்து கொண்டாடப்பட்டது. இந்த விழாவிற்கு கல்லுப்பட்டி ஸ்ரீ ரா. வே. குருசாமி தலைமை வகித்தார்கள். பல அறிஞர்களும் காந்தியத் தத்துவத்தைப் பற்றி பேசினர்கள்.

— உ. ராமையா

**ராஜபாளையம்**

ஊர்வலம், நூற்பு யக்ஞம் முதலியன நடைபெற்றன. கதர் உண்டியல் விற்பனை ஸ்ரீ பி. என். சுப்பராஜா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டு ஸ்ரீ பி. ஏ. ஜெகந்நாதன் ரூ. 100க்கு உண்டியல் வாங்கினர்கள். நூற்புப் போட்டியும் நடத்தப்பட்டு ரூ. 50 வரையில் பரிசுகள் வழங்கப்பட்டன.

— வெங்கிடகிருஷ்ணன்

**மதுரை**

நகர் காந்தி ஜயந்தி கமிட்டியின் சார்பில் காந்தி பூங்காவில் 86 மணி நேர நூற்பு வேள்வி 28–9–'54 மாலை 6 மணிக்கு ஆரம்பித்து வைக்கப்பட்டது. 86 மணி நேரம் இடைவிடாது 4 ராட்டைகள் நூற்றன. 2ந்தேதி காலை 8 மணிக்கு பூர்த்தியாயிற்று. இந்த மகா வேள்வியில் 344 அன்பர்கள் பங்கு எடுத்துக் கொண்டு 122 சிட்டங்கள் நூற்றனர்கள்.

2ந்தேதி யன்று ஊர்வலங்களும், பிரார்த்தனைகளும் நடைபெற்றன. அன்று சர்வ சேவா சங்கத்தைச் சேர்ந்த தொண்டர்களால் கதர் உண்டியல் விற்பனை துவக்கப்பட்டது.

— எம். சுயம்பிரகாசம்

---

(முன்பக்கத் தொடர்ச்சி)

அந்த நிலத்தில் என்ன சாகுபடி செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்வதை சமூகத்தின் பொறுப்பாக விட்டுவிடுகிறோம்.

**நிலப்பங்கீடு பிரச்னையை தீர்ப்பதுமட்டுமல்ல நோக்கம்**

பூமிதான இயக்கம் மூலம் புதிதாக நிலப்பங்கீடு செய்வதனுல் நிலப்பிரச்னை தீர்ந்துவிடும் என்று யாரும் சொல்லமுடியாது. பூமிதான யக்ஞம் படிப்படியாக சமூக புனரமைப்பை செய்ய முயற்சி செய்கிறது. நிலதானம் பெறுவது முதற்படியேயாம். கிடைத்த நிலத்தை பகிர்ந்து கொடுத்தல் இரண்டாம்படியாகும். நிலமில்லாதோருக்கு நிலமளித்து அவர்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியமான வசதி அளித்து கூட்டுறவு சங்கங்கள் அமைப்பதும், விவசாய வேலைகளுக்குப் புறம்பாக சிறு கைத்தொழில்களை அபிவிருத்தி செய்வதும் பூமிதான இயக்கத்தின் மூன்றும் படியாகும்.

**முற்றிலும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த லட்சியம்; ஆனுல் அரசியல் லட்சியமில்லை!!**

பூமிதான இயக்கத்திற்கு எந்தவிதமான அரசியல் நோக்கமுமில்லை. ஆனுல் சமூகத்தை முற்றிலும் மாற்றியமைக்க வேண்டுமென்ற லட்சியம், அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது. சர்வோதய ஊழியர்களோ பூமிதான யக்ஞ தொண்டர்களோ எந்த அரசியல் கட்சிப் போராட்டங்களிலும் ஈடுபடமாட்டார்கள்.

**அகில உலக இயக்கமாக விஸ்தரிப்புக்கும் சாத்தியக்கூறுகள்.**

சில ஐரோப்பிய நாடுகளிலும், அமெரிக்காவிலும் கூட பூமிதான இயக்கத்தில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. பர்மாவிலும் மக்கள் கவனத்தை கவர்ந்துள்ளது. இந்நாடுகளுக்கும் நில நன்கொடை இயக்கம் பரவலாம். உலக சமூகத்தில் பூமிதான இயக்கக் கொள்கைகளை கடைப்பிடிக்கும் நோக்குடன் இதை ஒரு அகில உலக இயக்கமாக்குவதற்கும் சாத்தியக்கூறுகளிருக்கின்றன. தற்சமயம் இயக்கத்தை பிறநாடுகளுக்கு விஸ்தரிப்பதற்குக் கட்டுப்பாடான முயற்சிகள் ஒன்றும் செய்யப்படவில்லை. ஆயினும் நம் நாட்டில் இயக்கம் வெற்றிபெறுமுன் அது பிற நாடுகளில் பரவுவது சாத்தியமில்லை."

**சட்டத்தால் சாத்தியமில்லை**

நிலப்பிரச்னையை சட்டமியற்றி தீர்க்க முடியாதா என்ற கேள்விக்கு பதிலளிக்கையில் ஸ்ரீ ஜெயப்பிரகாஷ் கூறியதாவது:

"பெரிய நிலச்சுவான்தார்கள் தாமேமுன்வந்து பூமிதான யக்ஞத்திற்கு தாராளமாக நன்கொடை அளித்துத் தங்கள் நில உடமையை குறைத்துக் கொண்டிருந்தால் சட்டமியற்ற வேண்டியிருக்காது. ஆனுல் நிலைமை வேருக இருக்கிறது. நாளுக்குநாள் பொதுஜன அபிப்ராயம் நிலப்பங்கீடு சட்டமியற்ற வேண்டும் என்று வளர்ந்து வருகிறது."

★

கிராமோதயம்

அக்டோபர் 15 1954

# நாட்டின் துணி உற்பத்திக் கொள்கை சம்பந்தமாக ஸ்ரீ கனூங்கோ கமிட்டியின் ஆராய்ச்சிகளும் சிபாரிசுகளும்.

**ராஜாஜியின் சிபாரிசுகளும்-பஞ்சாலைக் கட்டுப்பாடும்**

நமது நாட்டின் மிகப்பெரிதும், பரவலானதுமான கிராமக் கைத்தொழிலான கைத்தறிகளின் நிலைமை இரண்டாண்டுகளுக்கு முன் சீர்குலைந்து இருந்தபொழுது சேலை, வேஷ்டி ரகங்களை மில்கள் உற்பத்தி செய்யக் கூடாது என்று கட்டுப்படுத்தும்படியாக சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திற்கு சிபாரிசு செய்தது. சென்னை ராஜ்ய சட்டசபையும் இத் தீர்மானத்தை ஏகமனதாக ஆதரித்து மத்திய அரசாங்கத்தின் கவனத்திற்கு சிபாரிசு செய்தது. மத்திய சர்க்காரும் வேஷ்டி, சேலைகள் உற்பத்தியை மில்கள் 60 சதவிகிதமாகக் குறைத்துக் கொள்ள வேண்டும் என்று கட்டுப்படுத்திற்று. தேசத்தின் துணி உற்பத்தித் தொழிலை எவ்விதமாக புனரமைப்பதினால் தேசத்தின் பொருளாதார முன்னேற்றத்திற்கு தடங்கல் இல்லாமலும், அதே சமயத்தில் கைத்தறிகளுக்கும், கதருக்கும் துணி சப்ளை பகுதியில் இடமிருக்கும் வகை செய்ய முடியும் என்றும் ஆராய்ந்து சிபாரிசு செய்யும்படியாக ஸ்ரீ ஸத்யானந்த கனூங்கோ எம். பி. அவர்கள் தலைமையில் ஒரு கமிட்டி நியமிக்கப்பட்டது.

**கனூங்கோ கமிட்டியின் முடிவுகள்**

அந்த கமிட்டியின் சிபாரிசுகள் சென்ற செப்டம்பர் மாதக் கடைசியில் அரசாங்கத்திற்குக் கிடைத்துவிட்டதாக நிருபர்கள் அறிவிக்கின்றனர். கமிட்டியின் யாதாஸ்தில் முக்கியமானவற்றை கீழே தருகிறோம்:

(1) மில்களின் நெசவுப் பகுதியை தற்சமயம் இருக்கும் நிலையிலேயே நீடிக்க விட்டுவிட்டு நெசவுப் பகுதியை விஸ்தரிக்கப் பொதுத்தடையை விதித்தல்.

(2) வாழ்க்கைத்தரம் உயர்வதன் காரணமாகவும், மக்களின் வாங்கும் சக்தி அதிகரிப்பதனாலும், ஜனத்தொகைப் பெருக்கத்தாலும், எதிர்காலத்தில் அதிகரிக்கக்கூடிய ஜவுளித் தேவை அதிகரிப்பாலும் ஏற்படக்கூடிய உற்பத்தி அபிவிருத்தியைப்பூராவும் கைத்தறிகளுக்காக ஒதுக்கிவிடவேண்டும்.

(3) கைத்தறிகளின் தரத்தையும், உற்பத்திப் பொருட்களின் விலையைக் குறைக்கும் பொருட்டும், கைத்தறிகளின் தொழில்முறை நுணுக்கங்களை அபிவிருத்தி செய்து, கைத்தறி உற்பத்தி சக்தியை அதிகரிக்க வேண்டும். இதற்காக தற்சமயம் நாடெங்கும் இயங்கிவரும் கைத்தறிகளுக்கு பதில் விசைத்தறிகளையும் சீர்திருத்தப்பட்டுள்ள நுண்ணிய கைத்தறிகளையும் புகுத்தி பரவச் செய்ய வேண்டும்.

(4) கைத்தறித் துணியின் விலையைக் குறைக்கும்பொருட்டு, கைத்தறிகளுக்கு, நூலுக்கு பதிலாக, மில்களிலேயே தயாரித்த பாவுகளாகவே சப்ளை செய்தல்.

(5) கைத்தறிகளை வருடத்திற்கு 20,000 வீதம் விசைத்தறிகளாக மாற்றி அடுத்த 15 ஆண்டுகளில் முற்றிலும் விசைமயமாக்குதல்.

(6) எல்லா கைத்தறி நெசவாளர்களையும் கூட்டுறவு சங்கங்களில் சேர்ப்பதும், நூற்பு மில்களையும் கைத்தறி நெசவாளரின் நூல் தேவைகளுக்கேற்றவாறு பரவலாக சீரமைக்கவும் வேண்டும்.

(7) மில்களில் வருடத்திற்கு 5000 விசைத்தறிகளை தானே இயங்கும் தறிகளாக்குவது. இதனால் பஞ்சாலைகளின் நெசவுப் பகுதியில் பெரும்பாலான தொழிலாளர்கள் பாதிக்கப்பட்ட பொழுதிலும், வருடத்திற்கு 5000 வீதம் மாற்றியமைப்பதால் வேலையிழக்கக்கூடிய தொழிலாளிகள், வேலைப் பெருக்கத்தின் காரணமாக விஸ்தரிக்கப்படும் பகுதிகளில் வேலை பெறுவார்கள்.

**கைத்தறிகளுக்கு வாழ்வல்ல; அழிவுதரும்.**

இந்த சிபாரிசுகளின் மொத்தப்பலன் கைத்தறிகளை 1960ம் ஆண்டு அல்லது 15 ஆண்டுகளுக்குள் நாட்டிலிருந்து அழித்துவிடுவது என்பதுதான். கனூங்கோ கமிட்டியின் யாதாஸ்து ஒரு வகையில் பார்க்கப்போனால் சென்ற ஆண்டு பஞ்சாலை முதலாளிகளின் சார்பாக முதலாளிகள் சங்கத் தலைவர் ஸ்ரீ நெவிலிவாடியா அவர்கள் கூறிய யோசனைகளையே தழுவியிருப்பதாகக் கூறவேண்டும். 1960 ஆண்டுக்குள் பஞ்சாலைகள் மீதுள்ள சகல கட்டுப்பாடுகளையும் நீக்கப்படவேண்டும் என்பதும் ஒரு சிபார்சு. 15 ஆண்டுகளுக்குள் கைத்தறிகளையெல்லாம் விசைத்தறிகளாக்கிவிட வேண்டும். சுருக்கமாகக் கூறினால் பஞ்சாலை முதலாளிகள் 20 ஆண்டுகளில் கைத்தறிகளை முற்றிலும் நாட்டிலிருந்து மாய்த்துவிடவேண்டுமென கோரியதை கனூங்கோ கமிட்டியினர் 15 ஆண்டுகளில் முடித்துவிட வேண்டும் என்று சர்க்காருக்கு சிபாரிசு செய்வதாகவே கருத வேண்டியிருக்கிறது.

**உபதொழில்களும் மறைந்துபோகும்**

கைத்தறிகளுக்கு துணைத் தொழில்களாக இயங்கிவரும், தார் சுற்றுதல், பாவோடுதல், பாவு தோய்தல் போன்ற உபதொழில்களும், பஞ்சாலைகளிலிருந்து கைத்தறிகளுக்கு நூலுக்கு பதில் பாவுகளாகவே சப்ளை செய்வதன் மூலம் அழிந்து போய்விடும். இதன்பொருட்டு வேலையில்லாத் திண்டாட்டம் கணிசமாக அதிகரிக்குமேயன்றி குறையாது.

**மில்களின் தயவை எதிர்பார்க்க வேண்டும்**

கைத்தறிகளுக்கு, அல்லது சீர்திருத்திய கைத்தறிகளுக்கு மூலப்பொருளான நூல் சப்ளை செய்வதை மில்கள் பொறுப்பாக்குவதால், பஞ்சாலைகள் விரும்பினால் எப்பொழுது வேண்டுமானாலும் கைத்தறிகளையும் பொதுமக்களையும் நெருக்கடிக்கு உள்ளாக்கிவிடலாம். வெளிநாட்டு ஜவுளி ஏற்றுமதியாளர்களும் சேர்ந்தால் உள்நாட்டு ஜவுளி மார்க்கெட்களை தலைகீழாக்குவது எளிதான காரியம். வேலை நேரங்களைக் கட்டுப்படுத்தல், பஞ்சாலைகளின் நெசவுப்பகுதி வேலைகளை தொழில் நுணுக்கக் கருவிகள் மூலம், பெருக்குதல், நூற்பு மில்களே சில விசைத்தறிகளை தனியாக ஆரம்பித்தல் போன்ற பல முறைகளில் கட்டுப்பாடுகளை முறியடித்து, கைத்தறிகளை குற்றுயிராக்கலாம்.

3 - JAN 1956



**மலையைக் கெல்லி எலியைப் பிடித்தல்**

இந்திய ஜனத்தொகை 1960ல் சுமார் 40 கோடியாக இருக்கும் என்று மதிப்பிடப்பட்டால் நபருக்கு சராசரி 18 கஜம் துணித்தேவை வீதம் கணக்கிட்டால் நம் நாட்டின் தேவை வருடத்திற்கு சுமார் 720 கோடி கெஜம் என்று மதிப்பிடலாம். இதில் சுமார் 500 கோடி கெஜம் மில்களில் தயாரிக்க வேண்டும் என்று கமிட்டி சிபாரிசு செய்துள்ளது. பாக்கி கைத்தறிகளுக்கும், விசைத்தறிகளுக்குமாக மிஞ்சியுள்ள 220 கோடிகெஜம் துணியை கணுங்கோ கமிட்டியின் ஒரு சிபார்சையும் அமுல் நடத்தாமலேயே, இன்றைக்கே கைத்தறிகளால் தயாரித்து சப்ளை செய்யமுடியும்.

இந்த உண்மையை பார்க்கும்பொழுது "மலையைக்கெல்லி எலியைப் பிடிப்பது" போல்தான் இந்த கணுங்கா கமிட்டியின் ஆராய்ச்சிகளும் சிபாரிசுகளும் இருக்கிறது என்று சொல்ல நாம் வருந்துகிறோம்!!

— அ. நடராஜன்

★ ★

## தமிழ்நாட்டில் கதர்வேலையிலீடுபட்டுள்ள தொழிலாளர்களும் அவர்கள் அடைந்த வருமானமும்.

| விபாகங்கள் | சேவை செய்யும் கிராமங்கள் எண். | நூற்போர்கள் எண். | தரிகாரர் இதர தொழிலாளர்கள் | தொழிலாளர்களுக்கு கூலி கொடுத்தது ரூ. |
|---|---|---|---|---|
| **1950–51** | | | | |
| திருப்பூர் பகுதி | 10,84 | 32,054 | 984 | 18,84,155 |
| தஞ்சாவூர் ,, | 228 | 9,304 | 164 | 58,199 |
| மதுரை ,, | 404 | 26,006 | 618 | 22,61,76 |
| திருநெல்வேலி ,, | 278 | 20,470 | 176 | 16,71,60 |
| சென்னை ,, | .... | 400 | 6 | 1,703 |
| மொத்தம் .... | 1,994 | 88,234 | 1,948 | 23,07,393 |
| **1951–52** | | | | |
| திருப்பூர் பகுதி | 1,231 | 39,066 | 763 | 13,78,155 |
| தஞ்சாவூர் ,, | 227 | 14,150 | 504 | 1,72,758 |
| மதுரை ,, | 410 | 27,446 | 612 | 5,44,145 |
| திருநெல்வேலி ,, | 312 | 21,476 | 346 | 3,69,192 |
| சென்னை ,, | 8 | 604 | 6 | 1,653 |
| மொத்தம்... | 2,188 | 1,02,742 | 2,231 | 24,65,903 |
| **1952–53** | | | | |
| திருப்பூர் பகுதி | 1,500 | 39,492 | 763 | 7,31,700 |
| தஞ்சாவூர் ,, | 264 | 11,714 | 247 | 1,36,182 |
| மதுரை ,, | 410 | 20 396 | 496 | 2,50,608 |
| திருநெல்வேலி ,, | 418 | 21,910 | 326 | 1,67,742 |
| சென்னை ,, | 8 | 604 | 10 | 5,232 |
| மொத்தம் .... | 2,600 | 94.116 | 1,842 | 12,91,464 |
| **1953–54** | | | | |
| திருப்பூர் பகுதி | 1,560 | 49,492 | 1,072 | 15,73.483 |
| தஞ்சாவூர் ,, | 264 | 11,714 | 247 | 3,64,291 |
| மதுரை ,, | 440 | 28,396 | 496 | 6,07,060 |
| திருநெல்வேலி ,, | 478 | 26,910 | 326 | 4,04,962 |
| சென்னை ,, | 8 | 604 | 10 | 7,566 |
| மொத்தம் .... | 2,710 | 1,12,116 | 2.151 | 29,57,362 |

## பூமிதான இயக்கத்திற்கு "கிராமோதயம்" வாரப் பத்திரிகை

பூமிதான இயக்கம் பலமடைவதற்கும் மக்களிடையில் பூமிதான இயக்கக் கருத்துக்கள் தீவிரமாகப் பரவுவதற்கும் ஒரு வாரப் பத்திரிகையின் அவசியத்தை எல்லோரும் உணர்கிறார்கள். சர்வோதய மாதப் பத்திரிகை ஓரளவிற்கு தேவையைப் பூர்த்தி செய்தாலும் ஒரு வாரப்பத்திரிகையின் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. தற்சமயம் பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வெளிவரும் '**கிராமோதய**'ப் பத்திரிகையின் பக்கங்களையும், அளவையும் மாற்றியமைத்து வாரப் பத்திரிகையாக ஆக்குவதென சர்வ சேவா சங்கக் காரியதரிசி திரு. அண்ணாசாகேப் சகஸ்ரபுத்தே, திரு. சோவனேஜி, தமிழ்நாட்டு அகில பாரத சர்வ சேவா சங்கப் பிரதிநிதி, திரு. அ: பாலகிருஷ்ண பிள்ளை ஆகியோரும் மற்றும் நண்பர்களும் முடிவு செய்திருப்பதை மிகுந்த சந்தோஷத்துடன் வரவேற்கிறோம். "**கிராமோதயம்**" நவம்பர் மாதத்திலிருந்து பூமிதான இயக்கப் பத்திரிகையாகவும் வெளிவரப் போகின்றது. பூமிதான இயக்கம் வெற்றியடைவதன் மூலம், கிராம ராஜ்யத்திற்கு அஸ்திவாரமிடப்படுகின்றது. அந்தந்த கிராமங்களிலுள்ள நிலம் கிராம மக்களுக்குப் பொதுவாக ஆவதின் மூலமே ராமராஜ்யம் உதயமாகும். கிராமோதய பத்திரிகை பூமிதான இயக்கத்தின் பத்திரிகையாகவும் வருவது மிகவும் பொருத்தமாகும். பூமிதானப் புரட்சியில் ஆர்வங்கொண்ட அனைவரும் '**கிராமோதய**'ப் பத்திரிகையை ஆயிரக்கணக்கில் ஒவ்வொரு ஜில்லாவிலும் விற்பனையாகும்படி செய்வதின் மூலம் தீவிரக் கருத்துப் பிரசாரம் செய்ய வேண்டும்.

காந்தி கிராமம், 29—9—'54.

**ச. ஜெகந்நாதன்,**
**கன்வீனர்.**

## ஸ்ரீமதி விமலா தக்கர் எம். ஏ. அவர்களின் தமிழ்நாட்டு பூமிதான கால்நடை யாத்திரை 10-10-54 முதல் 10-11-54 வரை

**ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் தமிழ்நாட்டில்** அக்டோபர் 10-உ வரை ஒரு மாதம் பூமிதான சுற்றுப்பிரயாணம் செய்கிறார்கள். ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் கடந்த இரண்டு வருடங்களாக பூமிதான இயக்கத்தில் ஈடுபட்டு பல பெரிய நிலச்சுவான்தார்களின் மனதை மாற்றி அற்புதமான காரியங்களைச் சாதித்திருக்கிறார்கள். தமிழ்நாட்டில் அவருடைய சுற்றுப்பிரயாணம் பின்வருமாறு:—

10, 11-ம் தேதிகளில் — சென்னையில் கூட்டங்கள்

| | |
|---|---|
| 12ம் தேதி முதல் 19ம் தேதி வரை | செங்கல்பட்டு ஜில்லா பொன்னேரித் தாலூக்காவில் கால் நடை யாத்திரை. |
| 20ம் தேதி முதல் 27ம் தேதி வரை | மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூக்கா. |
| 28ம் தேதி முதல் நவம்பர் 10 வரை | திருநெல்வேலி ஜில்லா, நான்குனேரி, ஸ்ரீவைகுண்டம் தாலூக்கா. |

ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்கள் பூமிதான இயக்கத்தில் சிறந்த அனுபவமுடையவர்கள். ஆங்கிலத்திலும், ஹிந்தியிலும் சிறந்த பேச்சாளர். ஸ்ரீமதி விமலா தக்கர் அவர்களின் யாத்திரையைப் பயன்படுத்திக்கொண்டு பூமிதான இயக்கச் செய்தியை நல்ல முறையில் பிரசாரம் செய்து அந்தந்தத் தாலூக்காவின் கோட்டாவைப் பூர்த்தி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

**ச. ஜெகந்நாதன்**

# தமிழ்நாட்டில் நான்கு வருட கதர் வேலே

## [1951 ஜனவரி முதல் 1954 ஏப்ரல் முடிய.]

1951 ஜனவரி வரை தென்குமரியிலிருந்து வடவேங்கடம் வரை நடைபெற்று வந்த கதர் உற்பத்தி, விற்பனே, விநியோகம் யாவும் ஒரே காரியதரிசியின் ஒரே காரியாலயத்தின் மேற்பார்வையில் நிர்வாகம் செய்யப்பட்டு வந்தது. ஸ்தாபனத்தின் வளர்ச்சி, தொண்டர்களின் மலர்ச்சி, பொறுப்பு வாய்ந்த ஸ்தல முயற்சி முதலியவைகளுக்கு இது உகந்ததாக இல்லே என்பதை 1948-ம் ஆண்டுமுதல் அனேவரும் கண்டனர். இதன் பயனுக நிர்வாக விஷயத்திலும், வியாபார ரீதியிலும், தமிழ் மாகாணத்தை ஐந்து பகுதிகளாக பிரித்து ஒவ்வொரு பகுதியும் ஒரு அனுபவம் வாய்ந்த தொண்டரின் பொறுப்பில் ஒப்புவிக்கப்பட்டது.

இதன் பயனுக அந்தந்த வட்டாரங்களில் கதர்வேலே அபிவிருத்தி அடைந்துள்ளது என்பதை கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் கூறும். ஸ்தல ஊழியர்களுக்கும் அதிக பொருப்புணர்ச்சியுடன் வேலே செய்ய சந்தர்ப்பமும் இதனுல் ஏற்பட்டிருக்கிறது.

| வேலே விபரம். | தமிழ்நாட்டுப் பகுதிகள். | | ஒரே மாகாண கிளேயாக நிர்வாகம் நடந்து வந்த இரண்டு ஆண்டுகளில் நடந்த வேலே. | | | ஐந்து பகுதிகளாக பிரிவினே செய்த பின்னர் நடந்த கதர் வே[illegible] | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1948–49. 12 மாதம் | 1949–50 12 மாதம் | 1950–51 6 மாதம் | 1951–52 12 மாதம் | 1952–53 9 மாதம் | 1953–54. 12 மாதம் |
| | | | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| கதர் உற்பத்தி | திருப்பூர் | பகுதி | 23,86,835 | 23,01,217 | 9,80 224 | 18,82,952 | 9,78,966 | 27,62,432 |
| | தஞ்சாவூர் | ,, | 2,11,220 | 93,074 | 17 849 | 1,57,794 | 2,10,332 | 5,16,274 |
| | மதுரை | ,, | 2,61,673 | 2,86,096 | 1,89,251 | 7,93,004 | 3,66,565 | 8,50,222 |
| | திருநெல்வேலி | ,, | 2,47,314 | 3,22,397 | 1,27,716 | 3,89,361 | 2,47,275 | 5,24,229 |
| | சென்னே | ,, | 2,947 | 1,472 | ... | ... | 10,573 | 18,807 |
| | மாகாணம் பூராவும் மொத்தம் | | 31,09,989 | 30,04,256 | 13,15,040 | 32,23,111 | 18,13,711 | 46,71,984 |
| கதர் விற்பனே | திருப்பூர் | பகுதி | 7,34,171 | 7,91,390 | 6,08,610 | 10,56,602 | 7,32,127 | 12,74,917 |
| | தஞ்சாவூர் | ,, | 6,20,335 | 8,42,353 | 3,32,180 | 6,50,071 | 3,83,790 | 6,15,629 |
| | மதுரை | ,, | 7,28,047 | 8,17,258 | 5,16,339 | 7,79,317 | 5,21,369 | 7,51,705 |
| | திருநெல்வேலி | ,, | 3,16,132 | 3,28,306 | 1,92,957 | 3,55,280 | 2,46,855 | 4,44,043 |
| | சென்னே | ,, | 2,93,389 | 1,89,341 | 1,47,979 | 1,53,024 | 1,25,386 | 3,54,492 |
| | மாகாணம் பூராவும் மொத்தம் | | 26,92,074 | 29,68,648 | 17,98,065 | 29,94,294 | 20,09,527 | 34,40,786 |
| | | | சிட். | சிட். | சிட். | சிட். | சிட். | சிட். |
| நூல் உற்பத்தி | திருப்பூர் | பகுதி | 31,34,782 | 37,19,620 | 15,50,201 | 41,98,539 | 24,72,276 | 52,72,413 |
| | தஞ்சாவூர் | ,, | 8,82 057 | 8,42,353 | 3,08,952 | 8,07,862 | 6,04,431 | 9;23,976 |
| | மதுரை | ,, | 22,62,697 | 26,03,959 | 10,39,920 | 20,82,485 | 9,39,722 | 19,88,308 |
| | திருநெல்வேலி | ,, | 15,24,966 | 16,74,563 | 6,35,046 | 12,97,121 | 4,41,580 | 17,82,936 |
| | சென்னே | ,, | 1,54,301 | 1,36,464 | 63,096 | 1,05,748 | 69,238 | 92,200 |
| | மொத்தம் | | 79,58,803 | 89,74,959 | 35;97,215 | 84,91,755 | 45,27,247 | 10059833 |

## சுயதேவைப்பூர்த்தி நூலுக்குபதில் கதராக மாற்றியதும், சுயதேவை நூல் நெசவும்.

| | | நூலுக்கு பதில் கதராக மாற்றியது சிட்டம் எண்கள். | | | | சுயதேவை நூல் நெசவு செய்தது (சிட்டம்) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1950–51 | 1951–52 | 1952–53 | 1953–54 | 1950–51 | 1951–52 | 1952–53 | 1950–54 |
| திருப்பூர் | பகுதி | 1,73,281 | 7,60,407 | 7,54,238 | 9,21,091 | 35,175 | 91,857 | 39,710 | 29,717 |
| தஞ்சாவூர் | ,, | 12,606 | 72,688 | 58,613 | 37,947 | 6.659 | 45,761 | 29,230 | 17,542 |
| மதுரை | ,, | 1,41,529 | 4,35,838 | 2,23,722 | 3,54,287 | 20,383 | 47,935 | 56,883 | 56,838 |
| திருநெல்வேலி | ,, | 52,020 | 3,01,855 | 1,64,065 | 1,25,394 | 7,531 | 31,045 | 12,392 | 3,364 |
| சென்னே | ,, | 11,195 | 28,235 | 25,713 | 37.304 | 20,532 | 49,230 | 23,597 | 11,183 |
| மொத்தம் தமிழ் நாட்டில்... | | 3,90,631 | 15,99,023 | 12,26,351 | 14,76,023 | 90,280 | 2,65,828 | 1,61,812 | 1,18,644 |

பெருமானம் ரூபாய்.

| | | 1950–51 | 1951–52 | 1952–53 | 1953–54 | 1950–51 | 1951–52 | 1952–53 | 1953–54 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| திருப்பூர் | பகுதி | 45,327 | 2,00,872 | 1,96,155 | 2,49,171 | 12,585 | 38,447 | 17,970 | 12,615 |
| தஞ்சாவூர் | ,, | 4,538 | 21,417 | 14,748 | 19,030 | 2,568 | 19,811 | 11,130 | 7,572 |
| மதுரை | ,, | 33,366 | 1,05,416 | 54,333 | 93,822 | 7,872 | 21,359 | 24,064 | 21,547 |
| திருநெல்வேலி | ,, | 16,315 | 1,03,608 | 52,791 | 33,839 | 3,105 | 12,481 | 5,165 | 1,741 |
| சென்னே | ,, | 3,011 | 6,901 | 7,198 | 9,307 | 8,156 | 20,600 | 10,056 | 4,515 |
| மொத்தம் தமிழ்நாட்டில்... | | 1,02,557 | 4,38,214 | 3,25,225 | 4,05,169 | 34,286 | 1,12,698 | 68,385 | 47,990 |

# தமிழ்நாட்டில் நான்கு வருட கதர் வேலை 1950–1954.

இந்த அறிக்கை காலத்தில் கதர் வேலையில் புரட்சிகரமான மாறுதல்களும், எதிர்பாராத விதத்தில் பல இடையூறுகளும் ஏற்பட்டுள்ளன. அவைகள் யாவும் வேலைகளை பாதித்திருக்கின்றன என்பதோடன்றியில், வேலை முறைகளையும் பல துறைகளில் மாற்றியமைத்தும் கட்டுப்படுத்தியும் வர நேர்ந்தது.

**விபாகங்கள்**

1951ம் ஆண்டு ஜனவரி 7, 8 தேதிகளில் தமிழ் மாகாணத்தை ஐந்து பகுதிகளாக பிரிக்க சர்க்கா சங்கத்தின் டிரஸ்டி மண்டலம் தீர்மானம் செய்தது. ஸ்தல சூழ்நிலைக்கேற்றவாறு சங்கத்தின் கிளைகளின் வேலை முறைகளில் பல வேற்றுமைகள் இருப்பது இயற்கை. இந்த வேற்றுமைகளை யனுசரித்து நிர்வாகம் நடைபெற்றாலன்றி அந்தந்த கிளைகளின் வளர்ச்சி தடைப்பட்டுவிடுகிறது. இதை தவிர்ப்பதற்காகவே சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து, ஸ்தல சூழ்நிலைக்கேற்றவாறு நிர்வாகம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டது.

**ராட்டை உற்பத்தி - சாய அச்சு**

இதன் பயனாக நிர்வாக ரீதியில் பல மாறுபாடுகள் செய்ய நேர்ந்தது. திருப்பூரில் குவியல் முறையில் நடந்துவந்த சாய, அச்சுத் தொழிற்சாலையையும், ராட்டை உற்பத்தி சாலையையும் விபாகங்களிடையே பகிர்ந்து புனரமைக்கப்பட்டதின் பயனாக இன்று கோவில்பட்டி, காலாங்கரைப்பட்டி, ஸ்ரீ வில்லிப்புத்தூர், திருச்சி ஆகிய இடங்களில் புதிய ராட்டை உற்பத்தி தொழிற்சாலைகளும், வீரவநல்லூர், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் சாய அச்சுத் தொழிற்சாலைகளும் ஏற்பட்டு நடைபெற்றுவருகின்றன.

**கதர் உற்பத்தி:**

விபாகங்களாக பிரிக்கப்படுவதற்கு முன் தமிழ் நாடு பூராவிலும் 1949–50ம் வருடம் சுமார் ரூ. 30,00,000 மதிப்புள்ள கதர் உற்பத்தியாயிற்று. 1953–54ம் ஆண்டில் இது ரூ. 46,71,984 ஆக அதிகரித்துள்ளது. இந்த அபிவிருத்தி பரவலாக எல்லா விபாகங்களிலும் ஏற்பட்டுள்ளது. தஞ்சைப் பகுதியில் பிரிவினைக்கு முன் சுமார் ரூ. 93,074 பெருமான கதர் உற்பத்தியாகி வந்தது. 1953–54ம் ஆண்டில் ரூ. 5,16,274 ஆக அதிகரித்தது. இது சுமார் 6 மடங்கு அபிவிருத்தியாகும். அதேபோல் மதுரைப் பகுதியில் 1949–50ம் ஆண்டில் ரூ. 2,86,096 பெருமானமுள்ள கதர் உற்பத்தியான இடத்தில் 1953-54ம் ஆண்டில் ரூ. 8,50,222ம் திருநெல்வேலி விபாகத்தில் 1949–50ம் ஆண்டில் ரூ. 3,22,397 பெருமானமுள்ள கதர் உற்பத்தியான இடத்தில் 1953–54ம் ஆண்டில் ரூ. 5,24,229 ஆகவும் உற்பத்தி அதிகரித்தது. சென்னை விபாகத்தில் 1949–50ம் ஆண்டில் ரூ. 1472 பெருமானமுள்ள கதர் உற்பத்தியாயிற்று. 1953–54ல் அது ரூ. 18,807 ஆக உயர்ந்தது.

**கதர் விற்பனை**

தமிழ் நாடெங்கிலுமாக 1949–50ம் ஆண்டில் ரூ. 29,68,648 பெருமானமுள்ள கதர் விற்பனையாயிற்று. அது 1953–54ம் ஆண்டில் ரூ. 34,40,786 ஆக உயர்ந்தது. வெளி மாகாணங்களுக்கு 1949–50ல் சுமார் ரூ. 1,86,022 பெருமானமுள்ள கதர் ஏற்றுமதியாயிற்று. 1953–54-ம் வருடம் வெளி மாகாணங்களுக்கு ரூ. 9,80,842 பெருமானமுள்ள கதர் அனுப்பப்பட்டிருக்கிறது.

திருப்பூர் பகுதியில் 1949–50ல் விற்பனை ரூ. 7,91,390 ஆக இருந்தது. 1953–54ம் ஆண்டு ரூ. 12,74,917 ஆக அதிகரித்திருக்கிறது.

தஞ்சாவூர் பகுதியில் 1949–50ல் விற்பனை ரூ. 8,42,353 ஆக இருந்தது. 1953-54ல் ரூ. 6,15,629 ஆக குறைந்தது.

மதுரைப் பகுதியில் 1949–50ல் விற்பனை ரூ. 8,17,258 ஆக இருந்தது 1953–54ல் ரூ. 7,51,705 ஆக குறைந்தது.

திருநெல்வேலி பகுதியில் 1949–50ல் ரூ. 3,28,306 விற்பனையாயிற்று; 1953–54ல் ரூ. 4,44,043 ஆக கூடிற்று.

சென்னை பகுதியில் 1949–50ம் ஆண்டில் விற்பனை ரூ. 1,89,341 ஆக இருந்தது; 1953-54ல் அது ரூ. 3,54,492 ஆக கூடிற்று.

**நூல் உற்பத்தி:**

கதர் உற்பத்தி விற்பனையில் ஏற்பட்ட அபிவிருத்தியைக் காட்டிலும், கிராமங்களில் நூற்பு ஒரு உபதொழிலாக மேலும் பரவியுள்ளதை கீழ்க்கண்ட புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

1949–50ம் ஆண்டில் தமிழ் நாடெங்கும் சுமார் 89,74,959 சிட்டம் (மதிப்பு சுமார் ரூ. 18,26,577) உற்பத்தியாயிற்று. 1953–54ல் இதுசுமார் 1,00,59,833 சிட்டம் (மதிப்பு சுமார் ரூ. 24,16,389) ஆக உயர்ந்தது. இதன்பயனாக ரூ. 17,51,766 நூற்புக் கூலியாக சுமார் ஒரு லட்சம் நூற்போர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளது.

இத்துறையிலும் பல்வேறு பகுதிகளில் பலவாறாக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது.

திருப்பூர் பகுதியில் 1949–50ல் 37,19,620 சிட்டம் உற்பத்தியான இடத்தில் 1953–54ல் ரூ. 52,72,413 உற்பத்தியாயிற்று.

தஞ்சாவூர் பகுதியில் 1949–50ல் 8,42,353 சிட்டம் உற்பத்தியானது. 1953–54ல் 9,23,976 சிட்டம் ஆக அதிகரித்தது.

மதுரைப் பகுதியில் 1949–50ம் ஆண்டில் சுமார் 26,03,959 சிட்டம் உற்பத்தியானது; 1953–54ல் 19,88,308 சிட்டமாக குறைந்தது.

திருநெல்வேலி பகுதியில் 1949–50ல் 16,74,563 சிட்டம் உற்பத்தியான இடத்தில் 1953–54ல் 17,82,936 ஆகஅதிகரித்தது.

சென்னை பகுதியில் 1949–50ல் 1,36,464 சிட்டம் உற்பத்தியாயிற்று; 1953–54ல் இது 92,200 சிட்டமாக குறைந்தது.

**சுயதேவைப் பூர்த்தி:**

ஆடை சுயதேவைப்பூர்த்தி விஷயத்தில் விசேஷ முயற்சி எடுத்துக்கொண்டு அறிக்கை காலத்தில் கணிசமான அளவு சுயதேவைப் பூர்த்தி வேலை நடைபெற்றுள்ளதென்பதை புள்ளிவிபரங்கள் கூறும்.

மொத்தம் மாகாணம் பூராவிலுமாக 1949–50ம் வருடம் சுமார் 5,14,780 சிட்டம் கதராக மாற்றப்பட்டும், நெசவு செய்தும் ஆடை சுயதேவைப் பூர்த்தியாளருக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது 1953–54ல் சுமார் 15,94,667 சிட்டங்களாக உயர்ந்துள்ளது. மூன்று ஆண்டுகளில் மும்மடங்கு அதிகரித்து மொத்த உற்பத்தியில் சுமார் ஆறில் ஒரு பங்கு சுயதேவைப் பூர்த்தி கதர் உற்பத்தியாயிற்று.

**சம்பூர்ண சேவை லட்சியமும், முயற்சிகளும், பயிற்சிகளும்:**

அறிக்கை காலத்தில் கதர் மூலம் கிராமங்களின் சீர்குலைவை தடுத்து, கிராம சீர்திருத்தம் செய்து, கிராமப் பொருளாதார நிலையை சீர்படுத்தும் துறையில் விசேஷ கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

1950 நவம்பர் மாதம் சுமார் 50 தொண்டர்களுக்கு மூலனூர் உற்பத்திக் கிளையில் ஸ்ரீ கிருஷ்ணதாஸ் காந்தி அவர்கள் தலைமையில் ஒரு பயிற்சி முகாம் நடந்தது. அதன் பயனாக மூலனூர் வட்டாரத்தைச் சேர்ந்த 50 கிராமங்களில் தீவிர கதர் சுய

தேவைப் பூர்த்தி முயற்சி எடுக்கப்பட்டதின் பயனாக கதர் வேலைகள் இரட்டித்தது. 10 தொண்டர்கள் 10 கிராமங்களில் தங்கி சுமார் மூன்று வருடம் சேவை செய்ததன் பயனாக சுமார் 1000 குடும்பங்கள் ஷெ வட்டாரத்தில் பூரண சுயதேவைப்பூர்த்திக் குடும்பங்களாயின.

**நைனாக்கவுண்டன் வலசு**

நைனாகவுண்டன்வலசில் ஸ்ரீ சு. வைரவலிங்கம் ஆரம்பித்த பரிசிரமாலயத்திற்கு இப்பொழுது கிராமத்தில் நிலையான ஆதாரமும், ஆதரவும் ஏற்பட்டு சுமார் 8 பெண்களும், 12 ஆண்களும் நெசவுப்பயிற்சி பெற்று வருகின்றனர்.

கிராமங்களில் வேலை செய்துவந்த மற்ற பயிற்சித் தொண்டர்கள் சூழ்நிலையின் நிர்ப்பந்தங்கள் காரணமாக நிர்வாக பொறுப்பேற்று பல இடங்களில் தொண்டாற்றியும், வேறு சிலர், வேறுசில பகுதிகளில் பயிற்சி கூடங்களும், தனி நபர்களுக்கு பயிற்சி முகாம்களும் நடத்திவருகின்றனர்.

**சிப்பிப்பாறை தொண்டர் முகாம்**

1951ம் ஆண்டு மே மாதம் சிப்பிப்பாறையில் மீண்டும் சுமார் 50 தொண்டர்களுக்கு ஸ்ரீ கிருஷ்ண தாஸ் காந்தி அவர்கள் தலைமையில் பயிற்சி நடைபெற்றது. அதில் நமது வேலை முறைகளை கிராமங்களின் மறுமலர்ச்சிக்காக மாற்றியமைப்பதற்கான பூர்வாங்க திட்டம் வகுக்கப்பட்டது.

**தலைவரின் சுற்றுப்பிரயாணம்**

வியாபார ரீதியில் நடைபெற்ற நிர்வாக சீர்திருத்தங்களுடன் ஸ்தாபனத்தின் தார்மீக மனோ நிலையையும், லட்சிய மதிப்பீட்டையும் மாற்றுவதிலும், பொது ஜனங்களுக்கு கதர் மூலம் ஒரு புதிய லட்சியத்தை அடைவதற்கு வழிகாட்டுவதற்கும் 1951 மார்ச்சு ஸ்ரீ சர்க்கா சங்கத்தின் தலைவர் ஸ்ரீ தீரேந்திரமஜூம்தார் அவர்கள் சுற்றுப்பிரயாணம் பெரிதும் உதவியாக இருந்தது.

**கதர் முகாம்கள்**

பரவலான முறையில் வேலைகளை திருத்தியமைப்பதற்கு பயிற்சி முகாம்கள் பல நடத்தப் பெற்றன. 1951 அக்டோபர், நவம்பரில் ஸ்ரீ கனுகாந்தி, திரு. ஸோவனேஜி ஆகியோர் மேற்பார்வையில் கோவை ஜில்லாவில் நான்கு பயிற்சி முகாம்களும், தஞ்சாவூரில் இரண்டு பயிற்சி முகாம்களும், மதுரை பகுதியில் இரண்டு பயிற்சி முகாம்களும் நடந்தன. இதைத் தவிர அந்தந்த விபாக் செயலாளர்களின் மேற்பார்வையிலும் சுமார் 5 முகாம்கள் நடத்தப்பெற்றன.

**கதருக்கு கிராக்கி**

1950ம் வருடம் இறுதி முதல் 1951 ஜூன், ஜூலை முடிய நம் நாட்டு பஞ்சாலைத் தொழிலில் ஏற்பட்ட நெருக்கடி காரணமாக நாடெங்கும் ஏற்பட்ட ஆடைப் பஞ்சத்தின் பயனாக நமது கிளைகள் யாவற்றிலும் இருந்த கையிருப்பு கதர் முழுதும் பெரும்பாலும் விற்பனையாகிவிட்டது.

**வியாபார மந்தமும் – உற்பத்திக் கட்டுப்பாடும்**

1952ம் ஆண்டு ஆரம்ப முதலே விற்பனை முற்றிலும் குறைந்துவிட்டது. வேலையில்லாத் திண்டாட்ட பிரச்னை நமது நூற்போர், நெசவாளிகளுக்கும் வந்துவிட்டது. நூற்ற நூலுக்குப் பதில் கதர் ஆகிலும் கொடுங்கள் என்ற ஆவலாதி அதிகரித்தது. அம்மாதிரி மாற்றப்பட்ட கதரை விலை குறைத்து அவர்கள் விற்பனை செய்தனர். இதன் பயனாக நமது சர்க்கா சங்க கதரே கதர் வாடிக்கையாளருக்கு பன்மடங்கு விலை மலிவாக கிடைக்கலாயிற்று. விற்பனை பாதித்தது. அதன் பயனாக மீண்டும் உற்பத்தியாளருக்கு கூலி கொடுக்கவும் இயலாத விஷம நிலை மேன் மேலும் சிக்கலாயிற்று. தறிகளை கட்டுப்படுத்தியும், நூல் கொள் முதலை கட்டுப்படுத்தியும், நிலைமை சமாளிக்கப்பட்டது.

**புதிய கதர் இயக்கம்**

இந்த நெருக்கடி நிலைமையில்தான் திருவையாற்றில் 1952 செப்டம்பர் மாதம் 20ந் தேதி மாகாண கதரன்பர்கள், கதர் ஊழியர்களின் மகாநாடு ஒன்று நடைபெற்றது. அந்த மகாநாட்டில் செய்த முடிவுகளின் பயனாக தமிழ்நாடு, கேரள மாகாணங்களில் தீவிரமாக புதிய கதர் இயக்கபிரசாரம் நடைபெற்றது. கிராமங்களில் நடைபெற்றுவரும் கதர், கைத்தறி, இதர கைத்தொழில்களுக்கு பாதுகாப்பளிக்கும் பொருட்டு பெரிய இயந்திர தொழில்களை கட்டுப்படுத்தி, மேற் கூறிய கிராமக் கைத்தொழில்களுக்கு சர்க்கார் ஊக்கமளிக்க வேண்டும் என்று ஆங்காங்கு கிராம ஜனங்களும், கதரபிமானிகளும், கதர் தொழிலாளர்களும், பொதுக்கூட்டங்களில் தீர்மானங்கள் நிறைவேற்றியும், ஊர்வலங்கள் மூலமும் நிலைமையை பகிரங்கப்படுத்தினார்கள்.

**டிரஸ்டிகளின் கூட்டமும் தீர்மானமும்**

சர்க்கா சங்கத்தின் டிரஸ்டிகள் முதன்முறையாக தென்னிந்தியாவில் 1952 நவம்பரில் 20, 21, 22 தேதிகளில் காந்திநகரில் கூடினார்கள். அதில் தமிழ்நாட்டு கதர் ஊழியர்களின் புதிய கதர் (பாதுகாப்பு) இயக்கத்தைப் பாராட்டியும், அரசாங்கப் பாதுகாப்பைக் கோரியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**நடுவப்பட்டி கிராமோதய மகாநாடும்**

**கிராமோதய கதர் சங்கங்களும்**

திருவையாறு மாநாட்டுக்குப் பிறகு, டிரஸ்டி மண்டலக் கூட்டத்திற்கு முன் திரு. கிருஷ்ணதாஸ் காந்தி அவர்கள் திருநெல்வேலி ஜில்லாவில் கால்நடை யாத்திரை செய்தார்கள். அதன்பயனாக கதர் உற்பத்தியாளர்களும், கதர் கட்டுபவர்களும் சேர்ந்து வாழும் கிராமங்களில் பரஸ்பரம் ஒத்துழைப்பிருந்தாலே கதர் வேலையை மீண்டும் துவக்கலாம் என்ற நிலைமையைக் கண்டறிந்தார். 13–12–52 தேதி கோவில் பட்டி வட்டகையில், நடுவப்பட்டி கிராமத்தில் ஒரு நூற்போர்—கதரணிபவர்கள் மாநாடு நடந்தது. அதில் தான் கிராமோதய கதர் சங்க வேலைத்திட்டம் உருவாகி, முதல் கிராமோதய கதர் சங்கமும் நிறுவப்பட்டது. இந்த மாநாட்டின் முடிவுகளுக்கிணங்க நெல்லை ஜில்லாவில் சுமார் 125 கிராமோதய கதர் சங்கங்களும் திருப்பூர் பகுதியில் சுமார் 52 சங்கங்களும், மதுரை பகுதியில் சுமார் 65 சங்கங்களும், கேரள மாகாணத்தில் சுமார் 65 சங்கங்களும் தோன்றியுள்ளன. அவை அந்தந்த கிராமத்தில் நடைபெறும் கதர் வேலையை மேற்கொண்டு நடத்தி வருகின்றன. அவைகளில் பல சிறந்த சேவை செய்து வருகின்றன. இயக்கம் ஆரம்பித்து சுமார் ஓராண்டு காலத்திற்குள், இவை இவ்வளவு பொறுப்புடன் வேலை செய்வது மிகவும் பாராட்டத் தக்கது. இந்த சங்கங்களில் பல கதர் வேலையுடன் இதர கிராமக் கைத்தொழில் அபிவிருத்தியிலும் சிரத்தை காட்டி வருகின்றன என்பதும் பாராட்டத் தக்கதாகும். இன்று மொத்த உற்பத்தியில் சுமார் எட்டில் ஒரு பகுதி கிராமோதய கதர் சங்கங்கள் மூலமாகவே நடைபெறுகின்றன.

**கழுகாசலபுரம் மாநாடு**

சோர்வுற்றிருந்த ஊழியர்களும், நூற்போர், நெசவாளரும், கதரன்பர்களும் கிராமோதய கதர் சங்கங்கள் நிறுவப்பட்டு அவைகளின் வேலைகள் வளர வளர உற்சாகமடைந்தார்கள். இரண்டு மாதங்களுக்குள் சுமார் 90 கிராமோதய கதர் சங்கங்கள் நிறுவப்பட்டன. அவைகளின் முதலாவது மாநாடு நெல்லை ஜில்லாவில் விளாத்திகுளம் தாலூக்கா கழுகாசலபுரம் கிராமத்தில் 1953 டிசம்பர் 18, 19 தேதிகளில் நடைபெற்றது. அதையொட்டி நடந்த கண்காட்சியில் கத

ருடன் இதர சிறு கிராமக் கைத்தொழில்களும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

**கதர் கிராமக் கைத்தொழில் போர்டு**

• மேலே 1952 அக்டோபரில் நடந்த திருவையாறு மாநாட்டிலும், பிறகு நவம்பரில் டிரஸ்டிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட கதர், கிராமக் கைத்தொழில் பாதுகாப்புத் தீர்மானப்படி, சர்க்கா சங்க டிரஸ்டிகளும், அதிகாரிகளும் மத்திய அரசாங்கத்தினரிடம் கதர் இயக்கத்தில் தோன்றியுள்ள நெருக்கடி நிலையை வலியுறுத்திக் கூறினார்கள். இதன் பயனாக சுமார் ஓராண்டு காலம் தயங்கித் தயங்கி கடைசியாக 2-2-'53 தேதியன்று கதர், கிராமக் கைத்தொழில் போர்டின் முதலாவது கூட்டம் புது டில்லியில் நடைபெற்றது. போர்டின் முதலாவது நடவடிக்கையாக நாடெங்கும் தேங்கிக்கிடந்த சுமார் ரூ. 60 லட்சம் பெருமானமுள்ள கதரை விற்பனை செய்வதற்கு உதவி செய்யும்பொருட்டு கதர் விற்பனையில் ரூபாயிக்கு 3 அணா விதம் மான்யமும், நூற்புக்கருவிகளுக்கு மான்யமும், சுயதேவைப் பூர்த்தியாளருக்கு நெசவுக்கூலியில் மான்யமும் கொடுக்கலாயிற்று. இதன் பயனாக 1953 ஏப்ரல் மாதத்திற்குள் நிலைமை சீர்பட்டு நெருக்கடி நீங்கியது

**சர்க்கா சங்கம் சர்வ சேவா சங்கமாயிற்று**

சென்ற 11—3—'53 தேதி சாண்டிலில் நடைபெற்ற சர்வோதய சம்மேளனத்தில் சர்க்கா சங்கம், அதுவரை நடத்திவந்த வியாபார கதர் வேலைகளை மேற்கொண்டு நடத்துவதற்கு சர்க்கார் முன்வந்து கதர் கிராமக் கைத்தொழில் போர்டை நிறுவிவிட்டபடியால் தனது வியாபாரப் பொறுப்புகளை மேற்படி கதர் போர்டாரிடம் ஒப்புவித்துவிட்டு, சமக்ர கிராம சேவை நோக்குடன் வேலை செய்வதற்கு, உதவியாக இருக்கும் பொருட்டு, தனது தனி உருப்பை மாய்த்துக்கொண்டு காந்தியடிகளின் நிர்மாண வேலை ஸ்தாபனங்களைத் தும் ஒன்று சேர்ந்து, சர்வ சேவா சங்கத்துடன் ஒன்றி இயங்கி வரவேண்டும் என்று முடிவு செய்தது. இதன் பயனாக தமிழ்நாடு, கேரளம், ஆந்திரா, கர்னாடக் ஆகிய மாகாணங்களின் கதர் ஊழியர்களின் மாநாடு ஒன்று 1953 ஜுன் 1, 2 உகளில் பங்களூரில் நடந்தது. இந்த இணைப்போடு சர்க்கா சங்கக் கிளைகளில் கதர் வாங்குவதற்கு நூல் கொடுக்க வேண்டும் என்ற நூல் விதி ரத்து செய்யப்பட்டது.

**சர்வோதய யாத்திரைகளும்-நூல் காணிக்கை வசூலும்**

1949ம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 30 தேதிமுதல் பிப்ரவரி 12 தேதி வரை சர்க்காசங்க ஊழியர்கள்ஸ்தல கதரன்பர்களுடன்கலந்து சர்வோதய பக்ஷ யாத்திரைகளும், சர்வோதய மேளாக்களும் தவறாது கொண்டாடிவந்துள்ளனர். 1952ம் ஆண்டு முதல் இந்த யாத்திரைகளை பூமிதான யாத்திரைகளாக நடத்தப்பட்டு வருகின்றன. சென்ற நான்கு வருடங்களில் நூல் காணிக்கை வசூல் விபரம் கீழ்க்கண்டவாறு:

| (சிட்டங்கள்) | | 1951 | 1952 | 1953 | 1954 |
|---|---|---|---|---|---|
| திருப்பூர் | பகுதி | 492 | 3,681 | 5,339 | 11,437 |
| மதுரை | „ | *843 | *1,000 | 3,607 | 12,016 |
| தஞ்சாவூர் | „ | *300 | *500 | 762 | 2,457 |
| திருநெல்வேலி | „ | 151 | 2,289 | 1,834 | 4,473 |
| சென்னை | „ | *311 | 576 | 699 | 1,503 |
| மொத்தம் | | 2 097 | 8,046 | 12,241 | 31,886 |

* இந்த அடையாளமிட்ட புள்ளிவிபரங்களை ஊர்ஜிதப்படுத்த வேண்டும்.

மேலே கண்ட நான்கு வருடங்களில் கதர் வேலையில் நடந்த சில முக்கிய நிகழ்ச்சிகளை சுருங்கக் கூறியுள்ளோம். அதிக விபரங்களடங்கிய வேலை அறிக்கை தனியாக அச்சிலிருக்கிறது. வாசகர்கள் தேவைப்படுவோர், நான்கணா தபால் வில்லையுடன் காரியாலயத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

**அ. பாலகிருஷ்ணன்.**

## ஒரு இணையற்ற பலி

**ஸ்ரீகல்யாணதத்தர்**

*முராதபாத்திலிருந்து ஸ்ரீ பூஜாரிஜீ எழுதுகிறார்:*



"*1954 ஜூலை 18ந்தேதி மாலை* 4 மணிக்கு முராதபாத ஜில்லா பூமிதான கமிட்டியின் அங்கத்தினராயிருந்து வேலை செய்து கொண்டிருந்த ஸ்ரீ கல்யாணதத் என்னும் தொண்டர் விரோதிகளால் (ஐந்து முறை சுடப்பட்டு) இறந்தார். அவர் இறந்ததைக் குறித்து நாங்கள் மிகவும் வருந்துகிறோம். அவர் சற்றும் பயமின்றி அன்பு நிறைந்த சொற்களால், தான் உண்மையென நம்பும் எந்த விஷயத்தையும் நிச்சயமாக சாதித்து விடுவார். அவர் எந்த திட்டத்தையும் நடைமுறையில் செய்துகாட்டும் வல்லமை வாய்ந்தவர். இந்த ஒரே காரணத்தால்தான் அவர் மீது துவேஷம் ஆரம்பமாயிற்று. அந்த துவேஷமானது வலுவடைந்து குண்டுகளால் அவர் உயிரை மாய்த்துவிட்டது. *1951 டிசம்பர் 21*-ந்தேதி முராதாபாத் ஜில்லாவில் சுசைலா என்னும் கிராமத்திலிருந்து பூமிதான கால்நடை யாத்திரை ஆரம்பித்தார்கள்.

**யாருக்கு வோட்?**

அங்கு பல கேள்விகள் கேட்கப்பட்டன. அதில் இவரும் ஒரு கேள்வி கேட்டார், "பாபாஜீ இந்த தேர்தலில் யாருக்கு ஓட்டு அளிக்கலாம்?" அதற்குத் தாங்கள், எந்த பார்டிக்கும் அல்ல; ஆனால் ஏதாவது ஒரு பார்ட்டியில் ஒரு நல்ல மனிதர் இருந்தால் அவருக்குத்தான் ஓட்டு அளிக்க வேண்டும் என்று கூறினீர். அவர் அப்படியே செய்தார். ஓரிடத்தில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருவரும், பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் சார்பில் மற்றொருவரும் தேர்தலுக்கு நின்றார்கள். ஆனால் அவ்விடம் அவர் காங்கிரஸ் கட்சி அபேட்சகரை ஆதரிக்காமல் பிரஜா சோஷலிஸ்டு கட்சி அபேட்சகரை ஆதரித்தார். மற்றொரு இடத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகர் திறமையற்றவராகவும், காங்கிரஸ் கட்சி அபேட்சகர் திறமைசாலியாகவுமிருந்ததால் அவ்விடம் காங்கிரஸ் கட்சி அபேட்சகரையே ஆதரித்தார். ஆகவே ஆதரிக்கப்பட்ட அபேட்சகர்கள் இருவரும் கட்சிக்காக ஆதரிக்கப்படவில்லை.

**திருடர்களும், ஜாதிப்பித்தர்களும் விரோதிகளானார்கள்!**

இதுபோல, ஒரு தடவை ஒரு திருடன் கொல்லப்பட்டான். அதில் உத்தர பிரதேச மாகாண இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் என்னும் அதிகாரிக்கும் பங்கு உண்டு. ஆகவே அவருக்கு ஒரு பெரிய வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்திலும் அவர் இவ்விதம்தான் கூறினார்; அரசாங்கம் ஒரு திருடனை கொன்றதற்கு குதூகலம் கொண்டாடுகிறது. ஆனால் இதே போல் அநேக திருடர்களை பிடிக்க முடியாமல் விட்டு விடுகிறார்கள். இக்காரணத்தினால் திருடர் கூட்டத்திலும் அவர் மீது துவேஷ மனப்பான்மை உண்டாகிவிட்டது. இதே போல் அவர் ஒரு பெரிய உற்சவத்தில் ஹரிஜனங்களைக் கொண்டு கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்க வைத்தார். அப்பொழுது ஜனங்கள் ஒன்றும் பேசவில்லை. ஆனால் பிறகு கிணற்றிலுள்ள தண்ணீர் முழுதும் இறைக்கப்பட்டு அதில் கங்கா ஜலம் ஊற்றி புனி

தப்படுத்தினுர்கள். இக்காரணத்தினல் ஜாதி வேற்றுமையை விரும்பும் பலர் இவருக்கு விரோதிகளானுர்கள். இவர் குறைந்த நிலமுள்ள ஓர் குடியானவர்.

**பணக்காரர்களும், குடிகாரர்களும் விரோதம்!**

அவர் பூமிதான யக்ஞத்திற்கு முதன் முதலாக தனது கிராமத்தில் பாதிக்குமேற்பட்ட நிலத்தைக்கொடுத்துப் பிறரையும் கொடுக்கத் தூண்டினுர். ஊரின் பல பகுதிகளிலும், சகோதரர்களே ஏழைகளின் உரிமைகளை அவர்களுக்கே விட்டு விடுங்கள் அல்லது கடவுள் தானே வந்து கொடுக்கச்செய்துவிடுவார் என்று ஜனங்களுக்கு புத்திமதி கூறினுர். இந்தக் காரணத்தினல் சில பெரிய குடியானவர்களும் சிலமதுபானிகளும்கூட அவருக்கு விரோதியானுர்கள்.

**திட்டமிட்டு, கொலை**

சந்தா மூலமாக பணம் வசூலித்து வெளியிலுள்ள கள்ளர் கூட்டத் தலைவனுக்குப் பணம் கொடுத்து அவன் மூலமாக பட்டப்பகலில் அவர் கொலை செய்யப்பட்டார். இரண்டு குண்டுகள் பாய்ந்தவுடன் வலது கையை உயர்த்தி, "கேளுங்கள் சகோதரர்களே" என்று அவர் கூறி முடிப்பதற்குள் மூன்ருவது குண்டு கையை துளைத்துக் கொண்டு நெஞ்சில் பாய்ந்தது. பிறகு அவர் விழுந்துவிட்டார். அதன் பின்பு கூட அந்தக் கள்வன் குதிரைமீதிருந்து கீழிறங்கி மேலும் இரு முறை சுட்டு அவருடைய போர்வையாலேயே பிணத்தை நன்ருக மூடி ஓடிவிட்டான். அவர் தனது இலாகாவில் மிகவும் மரியாதையுள்ள ஒரு தொண்டராக இருந்தார். ஆகவே இந்த ஜில்லாவில் குறிப்பாக இப்பகுதி மிகவும் துக்கப்படுகிறது."

கடவுள் காட்டிய வழியில் கொல்லப்படுபவர் உண்மையிலேயே இறப்பதில்லை. அமரராகிவிடுகிருர். ஆகவே ஸ்ரீ கல்யாணின் மரணத்தினல் தரும சக்கரத்தின் சுழற்சி வேகம் கூடுகிறது. இவ்விதம் எல்லோருக்கும் தியாகத்தில் போட்டி ஏற்படட்டும்!

— விநோபா

கேம்ப்: வப்னகாமா, முசாபர்பூர்.

★

சிறு கதை

## "செலாவணி மாயம்"

**[ "இது ஒரு கற்பனை. ஆனல் உலகின் பொருளாதார, செலாவணி இயல்புகளின் அடிப்படை ரகசியங்களை இது விளக்குகிறது. இந்த கதை இரண்டு ராஜ்யங்களுக்கிடையே நாணயமாற்று, செலாவணி காரணமாகத் தோன்றும் பயங்கர விளைவுகளை விளக்குகிறது. உள்நாட்டிலும் அதே செலாவணியை மக்கள் தமக்குள் நடத்தும் பண்டமாற்றுதல்களுக்கும் உபயோகப்படுத்தவேண்டும் என்ற கட்டாயமும் இருந்தால் மக்கள் நிலை மேலும் எவ்வாறு சீர்கெடும் என்பதை எளிதில் ஊகித்துக்கொள்ளலாம். முத்துசிப்பியை செலாவணியாக்கியதின் காரணமாக விவசாய நாடாகிய சீதாநாதனின் அரசு எவ்வாறு சீர்குலைந்தது பாருங்கள்.**

**முத்துசிப்பிக்கு பதில் நாம் தங்கம், வெள்ளியை பயன்படுத்தினல், தங்கம், வெள்ளி சுரங்க முதலாளிகளும், மேற்படி சுரங்கங்கள் இருக்கும் ராஜ்ய மக்களில் ஒரு சிலரும், நேரடியாகவோ, மறைமுகமாகவோ தங்கம், வெள்ளி வியாபாரம் செய்யும் ஒரு சிலரும் தவிர மற்ற ஒருவரிடமும், செல்வம் சேர்ந்து குவிந்திருப்பது சாத்தியமில்லை. இதை புரிந்து கொள்வதில் யாருக்கும் எவ்வித சிரமமும் ஏற்படாது. பொருளியல் நூல்கள் எவ்வளவு சிக்கலான காரணங்களை காட்டினுலும் இறுதியில் எல்லா செல்வமும் தங்கம், வெள்ளி சுரங்கங்களின்மீது அதிகாரமிருக்கும் நாட்டு மக்களிடம் சென்று சேர்ந்துவிடும் என்பதில் சந்தேகமில்லை"**

— ஆசிரியர்.]

**சமுத்திரராஜன் ஏகபோக உரிமைகள்**

மச்சகந்தர் என்ற பெயரோடு பரதவர்களில் ஒரு அரசன் இருந்தான். சமுத்திரக்கரை ஓரமாக உள்ள பிரதேசத்தில் அவன் அரசு செலுத்தி வந்தான். அருகிலுள்ள சமுத்திரத்தின்மீது அவனுடைய சாம்ராஜ்யம் நன்கு ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. வெளிநாட்டவர் அவன் அதிகாரத்துக்குட்பட்ட சமுத்திரத்தில் ஒரு படகு ஓட்டவோ, மீன் பிடிக்கவோ, அல்லது ஒரு சிப்பி கூட பொறுக்கவோ தைரியமில்லாமலிருந்தார்கள். அவனுக்கும் அவன் ஜாதியைச் சேர்ந்த மற்ற பரதவர்களுக்கும் தான் அந்த சமுத்திர பொருட்களை எடுத்துக்கொள்ள உரிமையுண்டு. சாதாரண சோளி, சிப்பியிலிருந்து, மீன், முத்து வரை எல்லா பொருட்களையும் எடுத்துக்கொள்ளும் ஏகபோக உரிமை அவனுக்கும் அவன் பிரஜைகளுக்கும் தானிருந்தது.

**சீதாநாதன் அரசாட்சியும் படையெடுப்பும்**

கடற்கரையிலிருந்து ஐம்பது மைல் தூரத்தில் சீதாநாத் அரசு செலுத்தி வந்தான். அவனுடைய பிரஜைகள் முக்கியமாக குடியானவர்கள். அவன் ராஜ்யத்தில் காட்டுப்பொருட்களும், சுரங்கப் பொருட்களும் கூட கிடைத்து வந்தன. ஜனங்கள் பலவித கலைகளிலும் கைத்தொழில்களிலும் நிபுணர்களாக இருந்தார்கள். இருந்தும்கூட துரதிருஷ்டவசமாக அவன் அரசியல் நிர்வாகத்தில் பல பிளவுகள் ஏற்பட்டன. அன்யோன்ய மன வேற்றுமை காரணமாக நாட்டில் அராஜகம் பரவியிருந்தது. இந்த சூழ்நிலையை பயன்படுத்திக்கொண்டு அயல் நாட்டு அரசன் ஒருவன் சீதாநாத்தின் நாட்டின் மீது படையெடுக்க திட்டமிட்டான். சீதாநாத்திற்கு தன் நாட்டில் சுமுகமான நிலைமை உண்டாக்குவதற்கும் அக்கிரமக்காரர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றவும் வழி தென்படவில்லை. கடைசியாக அவன் மச்சகந்தரிடம் சரணடைந்தான். மச்சகந்தர் சீதாநாதரின் நாட்டில் அராஜகத்தை அகற்றுவதற்கும், அக்கிரமக்காரர்களிடமிருந்து நாட்டை காப்பாற்றும் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டான். சீதாநாதரின் நாட்டில் அவனே அரசு செலுத்தவேண்டுமென்றும், ஆனல் நாட்டின் பாதுகாப்பு மச்சகந்தரும், கூட்டாளிகளும், செய்யவேண்டுமென்றும், அதற்காக சீதாநாதரின் பிரஜைகள் மச்சகந்தருக்கு ஒரு சிறு வரி செலுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

**சிறிய புதிய வரி!**

வரி உண்மையிலேயே மிகவும் குறைவாகவேயிருந்தது. கரையிலிருந்து சிறிது தூரமாக சமுத்திரத்தில் ஒரு அபூர்வ ரகத்தைச் சேர்ந்த மீன் கிடைத்து வந்தது. அந்த மீனினுடைய சிப்பி மச்சகந்தரின் பிரஜைகளுக்கு ஓர் அழகான ஆபரணமாக யிருந்தது. ஒரு வழியாகப் பார்த்தால் அது வெள்ளிபோல் பிரகாசித்துக்கொண்டிருந்தது. ஆனல் வேறொருவழியில் அதில் இந்திர தேவரின் வில்லிலுள்ளதுபோல பல நிறங்கள் தென்பட்டன. சூரிய வெளிச்சத்தில் அது வைரத்தைப்போன்று மின்னியது. ஆனல் வெண்ணிலாவில் அது சுத்தமான வெள்ளியோ என்ற பிரமையை உண்டுபண்ணியது. அமாவாசை காரிருளில் கூட நட்சத்திரங்களின் பிரகாசத்தைப் பெற்று, அதிலிருந்து சாந்தமான

வர்ண ஜாலங்கள் நிறைந்த லேசான மின்னல் போன்ற ஒரு பிரகாசம் வெளிப்பட்டது. மிகவும் சிறியதாகவும் நாசுக்காகவும் இருந்ததால் இதனால் பலவித ஆபரணங்கள் செய்யப்பட்டு உடலின் பல அங்கங்களுக்கு போட்டுக்கொள்ள முடிந்தது. மச்ச கந்தரின் பிரஜைகளில் ஆண்களும், பெண்களும் இந்த ஆபரணங்களை மிகவும் விரும்பினர்கள். சீதா நாதரின் பிரஜைகளுக்குக்கூட இந்த நகைகளின் மீது மிகுந்த விருப்பமேற்பட்டு விட்டது.

**விவசாயிகள் மீன் சிப்பிகளை வரியாகச் செலுத்த வேண்டும்**

சீதா நாதரின் பிரஜைகள் இம்மாதிரி ஒவ்வொரு மீன் சிப்பி "குடும்பத்திற்கு ஒன்று" வீதம் மச்ச கந்தருக்கு வரியாகக் கொடுக்கவேண்டுமென்று நிச்சயிக்கப்பட்டது. மச்ச கந்தர், சீதா நாதரின் குடியானவப் பிரஜைகளின் பாதுகாப்புக்காக ஏற்றுக்கொண்டுள்ள இப்பெரிய பொறுப்பைப் பார்க்குமிடத்து இந்த வரியானது மிகவும் குறைவாகத்தானிருந்தது. வரி போடப்பட்ட பிறகும் கூட இந்த சிப்பிக்கு மற்ற சமுத்திரப் பொருட்களைவிட அதிகம் விலை ஏறவில்லை. 10 தோலா தானியம்தான் இதன் விலை. இந்தக் கணக்குப்படி ஒவ்வொரு குடும்பம் பிரதி வருடமும் $1\frac{1}{2}$ சேர் தானியம் வரியாகக் கொடுக்கவேண்டும். ஒரு நல்ல ஆரோக்கியமுள்ள பரதவருக்கு இது ஒரு நாளைய உணவுக்கு சமம். ராஜா மச்ச கந்தர் இந்த சிறு வரியைப் பெற்றுக்கொண்டு சீதா நாதரின் பிரஜைகளுக்கு மிகுந்த சேவை செய்ததால் அவர்களிடத்தில் நன்மதிப்புப் பெற்று அவருடைய புகழ் பரவியது. மச்ச கந்தர் உண்மையிலேயே மிகுந்த உதாரகுணமுடையவர்.

**ஆதிக்கத்தில் ஆசை இல்லை**

அவருடைய பிரஜைகளுக்கு உணவுக் கஷ்டமில்லை. அவருடைய நாட்டில் எல்லா பிரஜைகளும் மிகவும் சந்தோஷமாக வாழ்ந்தார்கள். வயல் வேலையைவிட, கொந்தளிக்கும் கடலில் மீன் பிடிப்பதுதான் அவர்களுக்கு அதிக விருப்பம். ஆகவே சீதா நாதரின் ராஜ்யத்தைப் பற்றி அவர்கள் அதிகமாக அக்கரை எடுத்துக்கொள்ளவில்லை. தனது பிரஜைகளின் பராக்கிரமத்தை வெளிப்படுத்த விரும்பினாரேயொழிய, மற்றபடி பொருளுக்கு ஆசைப்படவில்லை மச்ச கந்தர். ஆகவேதான் இந்த துச்சமான வரி விதிக்கப்பட்டது.

**அமைதியும் சுபிட்சமும் நிலவியது**

மிகச் சில நாட்களிலேயே மச்ச கந்தர் சீதாநாதரின் நாட்டில் சுபீட்சத்தை நிலைநாட்டினன். அதன் பலனாக அயல் நாட்டு அக்கிரம படை திரும்பிப் போகவேண்டியதாயிற்று. மகாராஜா மச்சகந்தருக்கு எல்லா இடங்களிலும் ஜனங்கள் ஜெய கோஷமிட்டார்கள். சீதாநாதரின் ராஜ கவி அவருக்கு "உதார கீர்த்தி"யென்று பெயரிட்டார்.

அந்த சமயம் இந்த சிறு வரியானது சீதாநாதரின் பிரஜைகளை நாசத்திற்கு உள்ளாக்குமென்றும், மச்ச கந்தரின் மக்கள் அதனால் லாபமடைவார்கள் என்றும் யாரும் நினைக்கவில்லை. சில மாதங்கள் வரையில் இந்த வரியின் விபரீத விளைவுகள் யாருக்கும் தெரியவில்லை. பலரிடமும் இம்மாதிரி சிப்பிகள் நிறைய இருந்தன.

**நெடுநாள் விளைவுகள், விபரீதம்!**

நாளாக நாளாக சிப்பிகள் குறைந்துவிட்டன. சீதாநாதரின் நாட்டில் இந்த சிப்பிகள் உற்பத்தியாவதில்லை. மேலும் சீதாநாதரின் பிரஜைகளிடம் இந்த சிப்பிகள் அடைவதற்கு எந்த அதிகாரமுமில்லை. எல்லா அதிகாரமும் மச்சகந்தரின் பிரஜைகளிடம்தான் இருந்தது. ஆகவே மச்சகந்தரின் பிரஜைகளுக்கு இந்த சிப்பி வியாபாரம் மிகுந்த லாபத்தைக் கொடுத்தது. சீதாநாதரின் பிரஜைகளுக்கு குடும்பம் ஒன்றுக்கு பிரதிமாதமும் ஒரு சிப்பி வீதம் தேவைப்பட்டுவந்தது. மேலும் அதை மச்சகந்தரின் பிரஜைகளிடம்தான் வாங்க வேண்டியிருந்தது. நாளுக்கு நாள் சிப்பியின் விலை உயர்ந்துவிட்டது. சீதாநாதரின் பிரஜைகள் யாவரும் குடியானவர்கள்.

**தானியம் கொடுத்து சிப்பிகள்: பத்திரநாத்தில் தேங்காய் வியாபாரம்!!**

அவர்கள் தானியம் கொடுத்து சிப்பி வாங்க ஆரம்பித்தார்கள். வரி போடுவதற்கு முன் $\frac{1}{8}$ சேர் தானியத்திற்கு ஒரு சிப்பி வீதம் கிடைத்தது. இப்பொழுது அதிகமாகிக்கொண்டே போய் 20 சேர் தானியத்திற்கு ஒரு சிப்பி வீதம் கிடைக்கும் நிலையேற்பட்டுவிட்டது. அது மிகவும் அரிதாகிவிட்டது. பதரிநாத் யாத்ரீகர்கள் எட்டணுவுக்கு ஒரு தேங்காய் வீதம் விலைக்கு வாங்கி கடவுளுக்கு அர்ச்சனை செய்கிறார்கள். பூசாரி அந்த தேங்காய்களை திரும்ப கடைக்காரனுக்கே மறுபடியும் விற்றுவிடுகிறான். இவ்விதமாக ஒரே தேங்காய் பல தடவைகள் விற்கவும், வாங்கவும் கைமாறுகிறது. இவ்விதம் பூசாரியும் கடைக்காரனும் சேர்ந்துகொண்டு சில தேங்காய்களை வைத்துக்கொண்டு ஒரு பெரிய வியாபாரம் நடத்திவிடுகிறார்கள். இதே சௌகரியம் மச்சகந்தரின் பிரஜைகளுக்கு சீதாநாதரின் நாட்டில் கிடைத்தது. அவர்கள் சீதாநாதரின் பிரஜைகளிடமிருந்து ஒரு சிப்பிக்கு ஒரு மணு தானியம் வசூலித்தார்கள். அடிக்கடி இதைவிட அதிக தானியமும் வசூல் செய்யப்பட்டது. சீதாநாதரின் பிரஜைகள் மச்சகந்தரின் அதிகாரிகளுக்கு பிரதி மாதம் ஒவ்வொரு சிப்பி வரியாக கொடுத்தார்கள். அதே சிப்பிக்காக அடுத்த மாதம் ஒரு மணு தானியம் கொடுக்க வேண்டியிருந்தது.

**சிப்பியின் விலை, நாட்டின் சீர்குலைவாயிற்று!!**

சீதாநாதரின் நாட்டில் 50,000 குடும்பங்களிருந்தன. ஆகவே மாதம் ஒன்றுக்கு 50,000 சிறிய சிப்பிகள்தான் வரியென்றாலும் 50,000 மணு தானியம் அதற்கு விலையாகிறது. ஒரு சிறிய சிப்பி உண்பதற்கும், உடுப்பதற்கும் உபயோகமில்லாமல் வரியின் உருவத்தை எடுத்துக்கொண்டு ஒரு பெரிய வியாபார பொருளாகிவிட்டது. இதற்குள்ளே ராஜா மச்சகந்தர் இறந்துவிட்டார். அவருடைய மகன் மகாராஜ் சிம்மாசனம் ஏறினன். அவன் தன் தகப்பனாரைப் போல் உதாரகுணமுடையவனல்ல. அவன் பிரஜைகளிடம் இந்த வியாபாரத்தினால் பொருள் பெருகுவதை கண்டான். ஆகவே இந்த வரியை ரத்து செய்யக்கூடாதென்று தீர்மானித்து சிப்பியின் உற்பத்தியை கட்டுப்படுத்தினன்.

**வரியின் தன்மையை மாற்றமாட்டான் — வரியை குறைப்பான்**

இதனால் நிலைமை மிகவும் மோசமடைந்தது. சீதாநாதரின் பிரஜைகள் மிகவும் பீதியடைந்து வரி கொடுக்கும் முறையை மாற்றியமைக்கும்படி கேட்டார்கள். மகராஜ் வரி கொடுக்கும் முறையை மாற்ற தயாராக இல்லாமல் ஒவ்வொரு குடும்பத்திலும் பிரதி மாதமும் ஒரு சிப்பி கொடுத்து வந்ததை மூன்று மாதத்திற்கொரு முறை வசூல் செய்வதெனத் தீர்மானித்தான். இதனால் வரியின் மதிப்பு மூன்றில் ஒரு பங்காக குறைந்தாலும் இத

CONNEMARA ... 3 - JAN 1956 MADRAS



ஞல் பிரஜைகளுக்கு நன்மை ஏற்படவில்லை. ஏனென்ருல் சிப்பிகளின் எண்ணிக்கையை மகாராஜ் கட்டுப்படுத்தி விட்டான். அதன் பயனுக சிப்பியின் விலை அதிகமாகி ஜனங்களின் கஷ்டம் அதிகரித்தது!!

— கே. ஜி. மஷ்ருவாலா

★

## ஏழைகளின் புரட்சி

**ஒரேவிதமான பேச்சு**

ஒரு ரிக்ஷா வண்டியில் நாகரீகமாக உடையணிந்து ஐவர் பிரயாணம் செய்துகொண்டிருந்தனர். அவர்களை போலீஸ்காரர்கள் பார்த்தும் பேசாமல் இருந்தனர். அவர்களின் ஆடம்பரமான உடையின் காரணமாக. அவர்கள் ஸ்டேஷனில் இறங்கியதும் வம்பு பேசத் தொடங்கினர். அவர்கள் பேசும் தோரணையிலேயே பல இடங்களிலும் பேசப்படுகிறது.

**தனிநபர் குறைகள்—சர்க்கார் பொறுப்பு?**

ஒருவர்: "உபயோகமற்ற சர்க்கார். எங்கும் ஒழுங்கு முறை கிடையாது. காலாகாலத்தில் வேலைகள் நடப்பது இல்லை. ஏழைகளைப்பற்றி ஏன் என்று கேட்பவர்கள் கிடையாது. எங்கும் அவன் ஏமாற்றப்படுகிருன்" என்ருர்.

மற்ருெருவர்: "முதலாளித்துவம் அரசு செலுத்துகிறது. தொழிலாளர்கள், குடியானவர்களைச் சேர்த்து கூட்டு முயற்சி செய்யாவிட்டால் விமோசனம் ஏற்படாது. அதுதான் என் வேலை" என்கிருர்.

**விஞ்ஞான முறையில் உணர்ச்சிக்கு என்ன வேலை?**

ஏழைகளைப்பற்றிப் பரிந்து பேசும் இந்த ஐந்து நபர்களும் ஒரே ரிக்ஷாவில் வந்தனர். அது சம்பந்தமாக அவர்களுடைய மனதில் எந்தவிதமான வேதனையும் ஏற்படவில்லை. கூலியின் தலையில் அளவுக்கு மீறிய பளுவை ஏற்றிவிட்டு, இண்டர் வகுப்பில் உட்கார்ந்துகொண்டு கூலி கொடுக்கும் விஷயமாகத் தாவா செய்துகொண்டு இருந்தார்கள். பரோபகாரம், இரக்கம், கருணை ஆகிய எல்லா குணங்களும் அவர்களிடம் காணப்படவில்லை. இதற்கெல்லாம் அரசாங்கம்தான் பொறுப்பேற்க வேண்டும் என்பது அவர்கள் கருத்து. அவர்கள் மனது பாலைவனம் மாதிரி இருந்தது. ஆனுல் அவர்கள் தங்களைப் புரட்சிவாதி என்றும், ஏழைகளின் நண்பர்கள் என்றும் சொல்லிக்கொள்ளுகிருர்கள். அவர்களுக்கு கிளர்ச்சி செய்யவேண்டும். அதில் உதவுகிறவர்கள் அவர்களுடைய தோழர்கள். அந்த தோழனைப்பற்றிய பரஸ்பரம நல்லெண்ணம் அனுதாபம் வேண்டுமென்பதில்லை.

**பரஸ்பரம் நல்லெண்ணம் வேண்டும்**

சில தினங்களுக்குப் பிறகு இதே மாதிரி மற்ருெரு ரிக்ஷாவில் ஐவர் பிரயாணம் செய்யக் கண்டேன். இது சமயம் மிகவும் களைப்புற்றிருந்த கிராமவாசிகளும், உழைப்பாளிகளுமான ஐவர் பிரயாணம் செய்தார்கள். அவர்களும் தயையற்ற மனதுடன் வாடகை கொடுக்கும் விஷயமாக தகராறு செய்துகொண்டிருந்தார்கள். ஏழ்மையின் காரணமாக அவர்கள் மனதிலுள்ள எல்லா நல்லெண்ணங்களும் போய்விட்டனபோலும்! மற்ற ஏழை எளியவர்களின்பேரில் அவர்களுக்கு அனுதாபம் இல்லை. உலகத்தில் வசதியாக உள்ளவர் ஏன் இருக்கிருர்களென்பது அவர்களுடைய புகார். இருவர்களுக்குமிடையில் உள்ள ஒற்றுமை தனவந்தர்களை பணமுள்ளவர்களாகவே வைத்திருக்கும் பொருளாதார அமைப்பை எதிர்ப்பதிலேதான் இருக்கிறது. ஆனுல் பரஸ்பரம் அனுதாபம் அற்றவர்களாகவே இருக்கிருர்கள்.

**ஒருமனப்பட்ட ஒற்றுமையில்லை**

ஏழைகள் சரியானபடி சிந்திக்க முடியாதவர்களாகவும், பணக்காரர் சிந்திக்க இஷ்டமில்லாதவர்களாகவும் இருக்கிருர்கள். எனவே அவரவர்கள் தங்களுக்குத் தோன்றிய முறையில் வேலை செய்கிருர்கள். ஏழைகளுக்கு எதிராக பணக்காரர்கள் ஒன்றுசேர முயற்சிக்கிருர்கள். அதேமாதிரி ஏழைகளும் பணக்காரர்களை எதிர்க்க கூட்டு அமைக்க முயற்சி செய்கிருர்கள். ஆனுல் இருவகுப்புக்கும் இடையே ஒருமனப்பட்ட ஒற்றுமை கிடையாது. எனவே இருவரிடையேயும் குரோத மனப்பான்மைதான் வளருகிறது. சிநேகம், அன்பு ஆகிய குணங்கள் வளர வழியேற்படுவதில்லை.

**சமத்துவம், சகோதரத்துவத்திற்கான வேலைகள்**

முதலாளித்துவ பொருளாதாரத்தின் காரணமாக ஏழை—பணக்காரர்களிடையே மனப்போக்கு, ஆசை இவைகளில் எதுவும் வித்தியாசம் இல்லை. பணக்காரர்களிடையே பெருமையும், ஏழைகளினிடையே போட்டி மனப்பான்மையுமிருக்கிறது. இவைகளுக்கிடையே வேலை செய்து நாம் சமத்துவ சகோதரத்துவத்தை நோக்கி முன்னேற வேண்டியிருக்கிறது.

**இதுவா புரட்சி?**

புரட்சிக்கு அவசியமும், அவசரமும் யாருக்கு ஏழைக்கா? பணக்காரருக்கா? சமூகத்தில் 95 சதம் ஏழைகள். கஷ்டங்கள் அவர்களுக்குத்தான் அதிகம். அவர்களுக்குத்தான் விமோசனம் ஏற்பட வேண்டும். இருந்தும் அதற்காக ஏன் நாம் இவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது? அதற்குக் காரணம் முதலாளித்துவ மனப்பான்மையும் கருத்துக்களையும் ஏழைகள்கூட கைவிடவில்லை என்பதே. பணக்காரர்கள் இவர்களின் எல்லா முயற்சிகளையும் தடுத்துவிட முடியும். ஏழையும் சுரண்டுவதற்கான சந்தர்ப்பத்தையேதான் எதிர்பார்க்கிருன். ஆனுல் பணக்காரர்களுக்கு கிடைக்கக் கூடிய சாதன வசதிகள் ஏழைக்குக் கிடையாது. எனவே அச்சாதனங்களைப்பெற அவன் மூர்க்கமாகப் போராடுகிருன். மற்றவர்களையும் அழைக்கிருன். இதனுல் பணக்காரர்களின் பொருட்களை அபகரிப்பதற்கான முயற்சிகள்தான் விருத்தியடைகின்றனவே தவிர பணத்தை சேர்த்து வைக்காமல் பலருக்கும் பயன்படுத்தும் எண்ணம் ஏற்படுவதில்லை. இதைக் கலகம் என்ருே சதியாலோசனை என்ருேதான் கூறலாம். உண்மையான புரட்சி எனக் கூற முடியாது.

**சுரண்டும் மனப்பான்மை மாறவேண்டும்**

முதலாளித்துவ பொருளாதார தத்துவத்தை மறுப்பதுதான் நமது கடமை. 95 சதம் உள்ள ஏழைகள் பொருமை, துவேஷத்திற்கு ஆளானுல் சமூகமே அழிந்துவிடும். முதலாவதாக அவர்கள் தங்கள் வாழ்க்கையிலும், குடும்பத்திலும், சமூகப் பழக்க வழக்கங்களிலும் சுரண்டல் மனப்பான்மையைக் களைந்தெறிய வேண்டும். ஒரு ஏழை மற்ருெரு ஏழையினுடைய தேவையை தன் சுயநலத்திற்கு உபயோகித்துக்கொண்டால் சமூகத்தில் சுரண்டல் மனப்பான்மை இருந்தேவரும். எனவே இந்த அடிப்படை உண்மையை தேசமக்களிடையே பரப்ப வேண்டியது மிகவும் அவசியமாகும்.

— தாதா தர்மாதிகாரி

[ஹிந்தியில் இருந்து.]

(125-ம் பக்கத் தொடர்ச்சி)

# 86-வது சர்க்கா ஜயந்தி

**சிதம்பரம்**

2-10-54 காலை சர்க்கா ஜயந்தியை முன்னிட்டு பிரார்த்தனையிலும், நூற்பு வேள்வியிலும் 40க்கு மேற்பட்ட அன்பர்கள் கலந்துகொண்டனர். அன்று சர்வோதய நூல் காணிக்கை வசூலிக்கப்பட்டதுடன், கிராமோதயம், சர்வோதயம் ஆகிய பத்திரிகைகளுக்கும் சந்தாதாரர்கள் சேர்க்கப்பட்டனர்.

— **கே. எஸ். கோவிந்தசாமி**

**இருகூர்**

கிராம சங்கத்தின் சார்பில் நூற்பு வேள்வி, கொடி வணக்கம் முதலியன நடத்தப்பட்டன. அத்துடன் இந்த வருடம் அந்த கிராமத்தில் கதர் உண்டியல் மூலம் கதர் விற்பனை ரூபாய் 500க்காவது செய்ய வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

— **வி. ஏ. கந்தசாமி**

**ஊத்துக்குளி**

காந்தி ஜயந்தியை முன்னிட்டு இந்த ஊரைச் சுற்றியுள்ள கிராமங்களுக்குச் சென்று பூமிதானப் பிரசாரம் செய்யப்பட்டது. பஜனை, நூற்பு வேள்வி, பொதுக்கூட்டம் முதலியனவும் நடைபெற்றன. சர்வோதய மேளா நூல் காணிக்கை 50 சிட்டம் இன்று வசூலாகியது.

— **டி. எஸ். மணி**

**மூலனூர்**

இங்குள்ள நூற்பவர்கள் 14 பேர்கள் சேர்ந்து 24 மணி நேர அகண்ட நூற்பு வேள்வி நடத்தினர்கள். அத்துடன் பஜனை, பிரார்த்தனை முதலியனவும் நடைபெற்றன. கிராமோதயப் பத்திரிகைக்கு 196 பேர்கள் சந்தாதாரர்களாகப் பதிவு செய்துகொண்டனர்.

— **என். எஸ். நடேசன்**

**திருப்பாப்புலியூர்**

குடிசைத் தொழில் அபிவிருத்தி நிலையம், நகர காங்கிரஸ் கமிட்டி ஆகியவைகளுடன் சேர்ந்து நூற்பு வேள்வி, பிரார்த்தனை முதலிய விழாக்களில் சர்வ சேவா சங்கத் தொண்டர்கள் கலந்துகொண்டனர். நூற்பு வேள்வியில் 16 பேர்கள் பங்கு எடுத்துக் கொண்டனர். மாலையில் பூமிதான பிரசார ஊர்வலம் நடைபெற்றது.

— **ஏ. வி. குப்புசாமி**

**கொடுமுடி**

இந் நகரவாசிகளின் முயற்சியால் ஊர்வலம், நூற்புவேள்வி முதலியன நன்கு நடைபெற்றது. நூற்பு வேள்வியில் நூற்கப்பட்ட நூல் 6 சிட்டங்களையும் சர்வ சேவா சங்கத்திற்கு நன்கொடையாக அளிக்கப்பட்டது. இந்தப் புனிதமான தினத்தில் வளந்தாக் கோட்டை என்ற ஊரில் ஒரு கிராமோதய கதர் சங்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

— **ஆர். முத்துசாமி**

**படியூர்**

இந்தக் கிளையைச் சேர்ந்த அள்ளப்பிச்சாக் கவுண்டன்புதூர் என்ற கிராமத்தில் காந்தி ஜெயந்தி மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. அருகாமையில் உள்ள கிராமங்களில் இருக்கும், கதர் நெசவுகாரர்கள் திரளாக வந்திருந்தது போற்றத்தக்கதாகும். மேலும் சர்க்கார் ஊழியர்களான மணியகாரர், ரெவின்யூ இன்ஸ்பெக்டர், ஆகியவர்களும் வந்திருந்தார்கள். அது சமயம் நூற்புப் போட்டியில் வெற்றியடைந்தவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டன. பூமிதானம், கிராமக் கைத்தொழில், கதர் உண்டியல் விற்பனை ஆகிய எல்லா கிராம முன்னேற்ற விஷயங்களைப் பற்றியும் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டன. அதன் பயனாக கீழே குறிப்பிட்டுள்ள அன்பர்கள் நில தானம் வழங்கினர்கள்.

| | | ஏ. செ. |
|---|---|---|
| ஆனைக்குளி மேடு | வீரப்ப கவுண்டர் மகன் சென்னியப்ப கவுண்டர் | 1 00 |
| ” | முத்துசாமிக் கவுண்டர் மகன் கொ[illegible]சாமி கவுண்டர் | 2 00 |
| நல்லிபாளையம் | முத்துச்சாமி கவுண்டர் மகன் கருப்ப கவுண்டர் | 1 15 |
| ” | குமரசாமிக் கவுண்டர் மகன் சென்னிமலைக் கவுண்டர் | 3 00 |
| ” | அப்புசாமிக் கவுண்டர் மகன் சென்னிமலைக் கவுண்டர் | 1 00 |
| | மொத்தம் | 7 15 |

| | | |
|---|---|---|
| ” | முத்துச்சாமி ஆசாரி மகன் மாரியப்ப ஆசாரி | ஒரு கலப்பை செட் |
| ஆனைக்குளி மேடு | காளியப்ப ஆசாரி மகன் வெங்கடாசல ஆசாரி | ” |

— **சி. சுப்பையன்**

**குண்டடம்**

காந்தி ஜெயந்தி கொண்டாட்டத்தில் பெருவாரியான நூற்பவர்கள், நெய்பவர்கள், கிராமவாசிகள் கலந்துகொண்டார்கள். முன்பு நடைபெற்ற நூற்புப் போட்டியில் தேரியவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நூற்பு வேள்வியில் 150 நபர்கள் கலந்துகொண்டார்கள். நூற்புப் போட்டியில் தேரிய 32 பேர்களுக்கு ரூ. 113—0—0 பெறுமானமுள்ள கதர் வழங்கப்பட்டது. கிராமோதய பத்திரிகைக்கு 20 பேர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்தார்கள்.

— **சி. ஆர். சுப்பிரமணியம்**

**திருப்பூர்**

மத்திய காதி வஸ்திராலயத்தில் பிரார்த்தனை, நூற்பு வேள்வி முதலியவைகள் நடைபெற்றன. அதன் பின்னர் சர்வ சேவா சங்கத் தொண்டர்கள் காதி உண்டியல் விற்பனையை ஆரம்பித்துவைத்தார்கள். முதல் தினமே ரூ. 1300க்கு விற்பனை செய்யப்பட்டது கீழே குறிப்பிடப்பட்டுள்ள அன்பர்கள் ரூ. 100க்கு மேல் வாங்கினர்கள்.

| | | |
|---|---|---|
| 1) | ஸ்ரீ டி. எஸ். கந்தசாமி செட்டியார் | ரூ. 200 0 0 |
| 2) | ” சி. ஆர். ரெங்கசாமி நாயுடு | ” 100 0 0 |
| 3) | ” கே. ராமே கவுண்டர் | ” 100 0 0 |
| 4) | ” வி. ஆர். பெருமாள் செட்டியார் | ” 100 0 0 |
| 5) | ” முத்துசாமிக் கவுண்டர் | ” 100 0 0 |
| 6) | ஸ்ரீமதி தாயம்மாள் | ” 100 0 0 |

— **ஜி. எஸ். சுப்புரத்னம்**

**ஈரோடு**

காந்தி ஜயந்தி வாரத்தை முன்னிட்டு ஈரோட்டிலும், அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் கால் நடையாகவும், சைக்கிள் மூலமாகவும் பூமிதானப் பிரசாரம் கதர் பிரசாரம் முதலியன செய்யப்பட்டு வருகிறது. தாண்டாம்பாளையம் கிராமத்தில் நடந்த சமுதாய நல அபிவிருத்தித் திட்டக் கூட்டத்தில் நமது சங்க ஊழியர்கள் கலந்துகொண்டு கதர் பிரசாரம் செய்ததுடன் கதர் உண்டியல் விற்பனையும் செய்திருக்கிறார்கள். கிராமவாசிகள் ரூ. 300க்கு கதர் உண்டியல்கள் வாங்கினர்கள்.

— **ஜி. எஸ். பாலசுப்பிரமணியம்**

★

[118-ம் பக்கத்தின் தொடர்ச்சி]

நபர்கள் வேலைக்கு வயலில் இறங்குகின்றனர். அப்பொழுது இவர்களுக்கு கஞ்சியும் கொடுக்கப் படுவதில்லை. குத்தகை கூலியான நான்கு ஆண்களின் மூன்று படி நெல்லும், ஆறு பெண்களின் கூலியான ஒரு படி நெல்லையும் வேலை செய்ய ஈடுபட்டிருக்கும் அவ்வளவு ஆண், பெண்களிடையேயும் விகிதாச்சாரப்படி பங்கிடு செய்யப்படுகிறது. அவர்களுக்கு ¼ படி நெல்கூட வருமானம் கிடைக்காது என்று சந்தேகப்படும் பலர் வேலைக்கே வருவதில்லை. இதுதான் இன்று தேசத் தொழிலாளர்களிடையே காணப்படும் போட்டிக்கும், ஒற்றுமைக்கும், சமத்துவத்திற்கும் சான்று. இந்த கிராமத்திற்குப் பொருந்தும் இவ் விஷயங்கள் சுற்றுவட்டாரங்களுக்கும் பொருந்தும். இதிலிருந்து நாம் பெறக்கூடிய படிப்பினை யாதெனில் மிகவும் ஏழைமையில் உழன்றுகொண்டிருக்கும் எளியோர்களுக்குக் கிடைக்கும் கஞ்சியையும் இழந்து, அவர்களுடைய சிறு ஊதியத்தையும் தயங்காமல் பிறருடன் பகிர்ந்துகொள்கின்றனர் என்பதே. இதுவே வாழ்வின் பிரகாசமான அம்சம்.

**ஊதியமின்றி உழைக்க வேண்டப்படுபவர்கள்**

இம்மாதிரி அரைப்பட்டினி கிடக்கும் மக்களைத்தான் ஐந்தாண்டு அபிவிருத்தித் திட்டத்திற்கு ஊதியமின்றி உழைப்பை கொடுக்கவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அவர்களுடைய சூழ்நிலையில் தாம் செய்யும் எந்த வேலைக்கும் ஊதியம் கிடைக்க வேண்டுமென்பது தவறாகாது. இம்மாதிரி மக்களை ஊதியமின்றி உழைக்கச் சொல்வது தவறாகாதா? அவர்கள் கடுமையாக உழைத்து உற்பத்தி செய்வதில்லையா? அவர்களின் கடுமையான உழைப்பின்பயனை அவர்கள் உரிமைகள் பாதுகாக்கப்படுகிறதா? அவர்களை சுரண்டாமலிருப்பதற்கு யார் வாக்குறுதியளிக்கிறார்கள்? இவர்கள் தேசத்திருப் பணிக்காக தலைவர் நேருஜியும் முதலமைச்சர் ஸ்ரீ காமராஜும் கோரும் கடுமையான உழைப்பை கொடுக்கவில்லையா? நமது மக்களில் பசியும், பிணியும் சூழ்ந்து பின்தங்கி வாழும் எண்பது முதல் தொண்ணூறு சதவிகிதம் மக்களும் இவர்களல்லவா? இவர்கள் நாட்டிற்காக கொடுக்கும் ஊதியமற்ற உழைப்பின் பயனை ஐந்தாண்டு அபிவிருத்தி திட்டத்தில் இவர்களுக்கு என்ன பங்கிருக்கிறது?

**ஜப்பானில் வேலையற்றோர் வேலைக்கு கிராமங்களை நோக்கிச் செல்கின்றனர்**

ஜப்பானில் நகரங்களில் வேலையில்லாமல் திண்டாடுபவர்கள், வேலைக்காக கிராமங்களுக்குச் செல்கின்றனர். இந்தியாவில் இது நேர்மாறாக இருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு முன் "1951ல்" இந்த கிராமத்தின் ஜனத்தொகை 2000 த்திற்கு மேற்பட்டிருந்தது. இன்று அதன் ஜனத்தொகை 1114 ஆக குறைந்திருக்கிறது. மூன்று ஆண்டுகளில் 800 நபர்கள் ஊரைவிட்டு வெளியேறியுள்ளார்கள்! இந்த துரதிர்ஷ்டசாலிகளின் துயரத்தை போக்க நகரங்களால் முடியுமா?

**வேலை செய்வார்கள்; ஒத்துழைக்கத் தயங்குவார்கள்**

கிராமவாசிகள் பொதுவாக கட்டுப்பாடின்றி பஞ்சத்தில் அடிபட்டு தங்கள் நலனைப் பாதுகாக்கும் பொருட்டு பேசத் திறனின்றி உழன்று வருகின்றனர். வேலை செய்ய தயாராக இருந்தபொழுதிலும், அவர்கள் இயற்கையாகவே பிறருடன் ஒத்துழைக்கத் தயங்குகின்றனர். அறியாமை படியாமை, கட்சி, எதிர்க் கட்சிகள், சில்லரைப் பூசல்கள் எல்லாம் மலிந்துகிடக்கின்ற கிராம சமூக வாழ்வு பல்லாண்டுகளாக புறக்கணிக்கப்பட்ட ஒரு சமூகத்தில் இயற்கையானவைகளே. இக் கடிதத்தை காந்தியடிகளின் கீழ்கண்ட வார்த்தைகளுடன் முடித்துக் கொள்கிறேன்.

"கிராம வேலை நம்மை பயமுறுத்துகிறது! நகரவாசிகளான நம்மை கிராம வாழ்க்கை சோதனை செய்கிறது. கடுமையான வாழ்க்கையே பல சந்தர்ப்பங்களில் நாம் தாங்க முடிவதில்லை. ஆனால் இந்த துயரங்களை பொருட்படுத்தாமல் தைரியமாக எதிர்த்துப் போக்க முயலவேண்டும், ஏனெனில் நமது லக்ஷியம் மக்களின் சுயராஜ்யத்தை நிலைநாட்டுவதேயன்றி ஒரு சாராரின் ஆட்சியைப் போக்கி மற்றொரு சாராரின் ஆட்சியை துவக்குவதல்ல. இதுகாறும் நகர மக்கள் வாழும் பொருட்டு ஆயிரக்கணக்கான கிராமவாசிகள், மடிந்தார்கள். அவர்களுக்காக நம்மில் சிலர் மடிய நேரிடலாம். ஆனால் இரண்டிற்கும் பெருத்த வித்தியாசமுண்டு. இதுவரை அறியாமையாலும் தன் விருப்பத்திற்கிணங்காமலும் கிராமவாசிகள் உழைத்து மாண்டார்கள். இன்று நாம் அவர்கள் பொருட்டு முழு மனதுடன் நம்மை நாமும் மாய்த்துக்கொள்வோமானால் நாடு நலம் பெறும். சுய உரிமை பெற்று கௌரவம் பெற்ற நம் நாட்டின் பொருட்டு தேவையான இத் தியாகம் புரிய நாம் பின் தங்காமலிருப்போமாக."

இதைப் பற்றி நகரவாசிகள் சிந்தனை செய்ய வேண்டும்!!

தக்கோலம்,
29—8—'54.

—சங்கு கணேசன்

## இந்த இதழில்


சமர்ப்பணம் 117
"மாநிலம் பொதுவான தென்போமே" 117
"உழைப்பினால் உருவான பள்ளிக்கூடம்" 118
கிராமங்களில் வேலையும், வேலையில்லாமையும் 118, 136
ஜனசக்தியால் சர்வோதய சமுதாயம் காண பூமிதானம் ஒரு வழி 119, 120
ஸ்ரீ தேவ் சுற்றுப்பிரயாணத்தில் மதுரை ஜில்லாவில் 394 ஏக்கர் பூதானம் 120
தீராத பிரச்னைகள், பூமிதானமும் மேல்நாடும் 121
2-வது தமிழ்நாடு சர்வோதய சம்மேளனத்தின் போது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் 122
இராமனாதபுரம் ஜில்லாவில் கிடைத்த பூதானம் 122
20 ஆரம்ப ஆசிரியர்களின் சம்பத்துதானம் 123
3 மாத ஊழியர் பயிற்சி முகாம் 124
"பூமிதான யக்ஞம், ஒரு உலக இயக்கமாகும்" 124
சாத்தியக்கூறுகள் இருக்கின்றன 124
தமிழ்நாட்டில் 86-வது சர்க்கா ஜயந்தி 125, 135
ஸ்ரீ காணுங்கோ ஆராய்ச்சிகளும் சிபாரிசுகளும் 126
கதர்வேலையிலீடுபட்டுள்ள தொழிலாளர்களும் வருமானமும் 127
பூமிதான இயக்கத்திற்கு "கிராமோதய" வாரப் பத்திரிகை 127
விமலா தக்கரின் பூமிதான கால்நடை யாத்திரை 127
தமிழ்நாட்டில் நான்கு வருட கதர் வேலை 128
ஓர் இணையற்ற பலி 131
"செலாவணி மாயம்" 132
ஏழைகளின் புரட்சி 134



**Edited and Published by B. Govindaswami for All India Spinners' Association, (Tamilnad Branch) Tirupur. Printed by S. Subramaniam at the Kamala Printing Press, Tirupur.**

(இந்தப் பத்திரிகை கையினால் செய்த காகிதத்தில் அச்சிடப்பட்டது.)


JAN 1956